Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, AUGUST 21, 2024

புதன்கிழமை ஆகஸ்ட் 21, 2024 | ஒளி: 10 கதிர்: 033 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## செலவுக்கான அறிக்கை இன்றேல் குற்றவாளி

ஜனாதிபதித் தேர்தல் முடிந்து 21 நாட்களுக்குள் தேர்தல் செலவு அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என அனைத்து வேட்பாளர்களுக்கும் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

### மாகாண முறைமையை வழங்குவதற்கு

# “மறுப்போர் வராதீர்கள்”



இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைமை அதிகாரம் வழங்காத எந்தவொரு வேட்பாளரையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று தெரிவித்துள்ள என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் அவ்வாறான நிலைப்பாட்டை நிராகரிப்பவர்கள் வடக்கு கிழக்கு மக்களிடம் வாக்கு கேட்க வர வேண்டியதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் செவ்வாய்க்கிழமை (20) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தென்னிலங்கையில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டம் ஒன்றில் வடக்கு கிழக்கு ஒன்றிணையக் கூடாதென்றும் அதிகாரப் பகிர்வுக்கு என்றும் இடமில்லை என்றும் பொலிஸ் காணி அதிகாரங்கள் மாகாணங்களுக்கு வழங்கப்படமாட்டாது என்று தெரிவித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.

தொடர்ச்சி P2



## ரூ.300 மில்லியன் இழப்பீடு கோரி வழக்கு

அரச வைத்தியசாலையில் கண்புரை அறுவை சிகிச்சைக்குப் பிறகு பயன்படுத்தப்படும் ‘ப்ரெட்னிசோலோன் அசிடேடீன்’ கண் சொட்டு மருந்தைப் பயன்படுத்தியதால் நிரந்தர பார்வை இழப்புக்கு உள்ளான மூன்று நோயாளிகள், கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (20) வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## “ராஜபக்ஷ குடும்பமே ரணிலிடம் ஒப்படைத்தது”



நாட்டை கட்டியெழுப்பிய தலைவரை எதிர்ப்பதற்கு மொட்டுக் கட்சிக்குத் தார்மீக உரிமை இல்லை என தெரிவித்த நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, அன்று எங்கள் தலைவர்கள் ஓடிவிட்டனர். நாட்டைப் பொறுப்பேற்க யாரும் இல்லை. அப்போது எமது தலைவர்கள் இந்த நாட்டை ரணில் விக்ரமசிங்கவிடம் ஒப்படைத்தனர். அதை வழங்கியது ராஜபக்ஷ குடும்பமே தவிர நாங்கள் அல்ல என்றார்.

தொடர்ச்சி P2

## மொட்டுவின் புதிய கூட்டணிக்கு புதிய தலைவர்



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான புதிய அரசியல் கட்சியொன்றை உருவாக்குவது தொடர்பான விசேட கலந்துரையாடல் கொழும்பில் செவ்வாய்க்கிழமை (20) இடம்பெற்றது.

தொடர்ச்சி P2

## 109 ரூபாவை விஞ்ச முடியாது

ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் தமது பிரசார பணிகளின் போது, வாக்காளருக்காக செலவிடக் கூடிய அதிகபட்ச தொகையை நிர்ணயித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல், திங்கட்கிழமை (19) இரவு வெளியிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## ரந்தோலி பெரஹரா...



கண்டி வரலாற்றுச் சிறப்புமிக்க தலதா மாளிகையின் வருடாந்த எசல பெரஹராவின் இறுதி ரந்தோலி பெரஹரா திங்கட்கிழமை (19) இரவு நடைபெற்றதுடன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் ஆயிரக்கணக்கான மக்களுடன் இணைந்து பெரஹராவைக் கண்டுகளித்தார்.

## “ஜனநாயகமே நாட்டுக்கு தேவை”



பலவிதமான பேரழிவுகளுக்கு உள்ளாகி தடைகள், மிரட்டல்கள், கர்ஜனைகள், துன்பங்கள் மற்றும் அழுத்தங்களுக்கு மத்தியில் மக்கள் வாழ்கின்றார்கள். பெரும்பாலானவர்களின் வாழ்க்கை சிரமத்திற்கு மத்தியில் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த நிலையில், ஜனநாயகத்திற்கு இடமளித்து அதனூடாக பெறப்படுகின்ற மக்கள் வரத்துடன் தற்காலிக பாதுகாவலராகத் தரப்படுத்தப்பட்ட ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “கிழக்கு ஆளுநர் பதவியை கேட்கவில்லை”

### மறுத்தார் ஹக்கீம்; சிறிகொத்தா அனாதை இல்லம் என்கிறார்



எம்.எஸ்.எம்.நூர்தீன்

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிகொத்தா, தற்போது அனாதை இல்லமாக மாறியுள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## அசோக பிரியந்த, ரணிலுக்கு ஆதரவு



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்க உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தீர்மானித்துள்ளார்.

அசோக பிரியந்த, பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி வேட்பாளருமான

தொடர்ச்சி P2

### தமிழ்பொதுவேட்பாளர்

## தந்திர சூழ்ச்சியில் சிக்கிவிடக்கூடாது

எஸ்.தில்லைநாதன்

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பங்காளிகளாக இருக்க வேண்டுமே தவிர, தமிழ் பொது வேட்பாளர் என்ற ஏமாற்று சூழ்ச்சியில் சிக்கிவிடக்கூடாது, என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்

தொடர்ச்சி P2

## சஜித்துக்கு உழைக்காத ஹரீஸ் இடைநிறுத்தம்



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் பதவியில் இருந்தும், உயர் பீட உறுப்புரிமையிலிருந்தும் அந்தக் கட்சியின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

மு.கா. தலைவர் ரஊப் ஹக்கீமுடைய அறிவுறுத்தலுக்கு அமைவாக, கட்சியின் செயலாளர் சிரேஷ்ட

தொடர்ச்சி P2

## இலங்கை-இந்தியாவுக்கு இடையில் ஒப்பந்தம்



இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செவ்வாய்க்கிழமை (19) கைச்சாத்திடப்பட்டுள்ளது.

கெரவலப்பிட்டிய ‘சொபாதனவி’ ஒருங்கிணைந்த சுழற்சி மின் உற்பத்தி நிலையத்திற்கு திரவ இயற்கை எரிவாயு (Liquefied natural gas - LNG) களஞ்சியப்படுத்துவதற்கு உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி செய்தல்,எல்என்ஜி வாயுபரிமாற்றம் மற்றும் விநியோகம் தொடர்பிலேயே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “மறுப்போர் வராதீர்கள்”

இது தொடர்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் மேலும் பதிலளிக்கையில்,

இலங்கை சுதந்திரம் அடைந்தது முதல் தமிழருடைய அரசியல் உரிமை பிரச்சினை அவ்வப்போது பேசப்பட்டு வந்தாலும் காலப்போக்கில் பல்வேறு ஒப்பந்தங்கள் பல்வேறு இணக்கப்பாடுகள் பல்வேறு பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்ட பின்னரும் அதில் முன்னேற்றங்கள் காணப்படாமையால் தரப்படுத்தலூடாக தமிழ் மக்களுடைய உரிமைகள் மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆயுதப் போராட்டங்கள் தலைதூக்கிப் பல உயிர்த் தியாகங்கள் சொத்தழிவுகள் அங்கவீனங்கள் சொல்லொணா துயரங்களுக்குப் பின்னர் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக மாகாண அரசு முறைமை கொண்டுவரப்பட்டது.

13ஆவது திருத்தச் சட்டத்தினூடாக கிடைத்த அந்த குறைந்த அதிகாரம் கொண்ட மாகாண முறைமைக்கு அதிகாரங்களோ அதிகாரப் பகிர்வை வழங்க மறுக்கும் ஜனாதிபதி வேட்பாளர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்குப் பிரசார நடவடிக்கைகளுக்கு வரத்தேவையில்லை. அவ்வாறான வேட்பாளர்களைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## “ஜனநாயகமே நாட்டுக்கு தேவை”

மிகச் சுத்தமான ஜனநாயகவாதிகள் என பட்டங்கள் கிடைத்தாலும், அதிகாரம் உள்ள இடங்களுக்கு பதிலாளர்களாக பிரவேசிக்கின்ற போது அதிகார வெறி ஏற்படுகிறது. அதன் காரணமாக தரப்படுத்தப்பட்ட ஜனநாயக முறை செயல்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும் என்றார்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கு ஆதரவு வழங்கும் நோக்கில் அரசியல் கட்சிகள், கலைஞர்கள், சிவில் அமைப்புகள், ஓய்வு பெற்ற இராணுவத்தினர், சமூக சேவையாளர்கள், மற்றும் தொழிற்சங்க தலைவர்கள் உள்ளிட்டவர்களுடன் ஒருங்கிணைந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு வோட்டர் ஏஜ் ஹோட்டலில் செவ்வாய்க்கிழமை (20) நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல் ஜனநாயகத்தின் போது பொறுப்புக் கூறலைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். செலவழிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் நாட்டுக்கும் மக்களுக்கும் இந்த சமூகத்துக்குப் பெறுமதியைச் சேர்ப்பதாக இருக்க வேண்டும். இதுதான் ஐக்கிய மக்கள் கட்சியின் பிரதான நோக்கமாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

மக்களின் ஆசீர்வாதத்தோடு அதிகாரம் கிடைப்பது போன்று அதிகாரப் பேராசையில், அதன் பேரவாவில் அதனை உச்சகட்டத்திற்கு பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும்.

அதிகாரம் கிடைப்பது போன்று அதனைக் கைவிடவும் தயாராக இருக்க வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியின் பயணப் பாதையில் ஒருபோதும் குறுக்கு வழியில் அல்லது ஜனநாயகத்தை மீறுகின்ற விதத்திலோ அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ள செயற்படவில்லை. அவ்வாறான பல சந்தர்ப்பங்கள் இருந்த போதும் அதற்கு இடமளிக்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அதிகாரத்தைக் கைப்பற்றுவது நோக்கம் அல்ல, மக்களுக்குச் சேவை செய்வதே நோக்கமாகும். கொள்கை திட்ட அரசியலின் ஊடாகவே அதிகாரத்தைப் பெறுவது உச்சகட்ட நோக்கமாகும். மக்கள் அபிப்பிராயத்திற்கு முதலிடம் கொடுத்து உகந்த சேவையை மேற்கொள்வது அரச நிர்வாகத்தின் சிறந்த தன்மை என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இன்று நாட்டில் உள்ள அரசியல் யாப்பு மீறப்படுகிறது. ஜனநாயகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று பிரதான தூண்களுக்கு இடையேயான தடைகள் மற்றும் சமன்பாடு தொடர்பாக அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டு இருந்தாலும் அவை மீறப்பட்டு இருக்கிறது. ஜனநாயகமும் அரசியலமைப்பும் முழுமையாகப் பலி எடுக்கப்பட்டு வருகிறது இந்த முறைமையை முற்றாக மாற்ற வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## மொட்டுவின் புதிய கூட்டணிக்கு புதிய தலைவர்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நடைபெறும் எந்தவொரு தேர்தலுக்கும் இந்த புதிய அரசியல் கட்சியின் மூலம் வேட்பாளர்களை நிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் அலுப் கட்சியின் பிரதம கொறடா பிரசன்ன ரணதுங்க ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவாகக் கருத்து தெரிவித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நூற்றுக்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

புதிய அரசியல் கட்சிக்குப் பல பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் உருவாக்கப்படவுள்ள புதிய அரசியல் கட்சிக்கான அரசியலமைப்பு ஏற்கெனவே தயாரிக்கப்பட்டு விட்டதால், அந்த அரசியலமைப்பின் படி செயற்படுவதற்குப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களால் உருவாக்கப்படவுள்ள புதிய கூட்டணியின் தலைவர் பதவியைப் பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## “கிழக்கு ஆளுநர் பதவியை கேட்டவில்லை”

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து காத்தான்குடி கடற்கரையில் உள்ள தனியார் மண்டபத்தில், ஆதரவாளர்களுடன் இ (19) திங்கட்கிழமை (19) இரவு கலந்துரையாடல் நடைபெற்றது

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் தொடர்ந்துரையாற்றிய ரவூப் ஹக்கீம் மொட்டுக் கட்சி காரர்களின் அடைக்கலமாக அவர்கள் போய் தங்கியிருக்கும் அனாதை இல்லமாக சிறிகொத்தா தற்போது காணப்படுகிறது. இவர் ஜனாதிபதியான பிறகு சிறிகொத்தா எப்படிக் காணப்படுகிறது என்பது எல்லோருக்கும் தெரியும்.

எங்கள் கட்சிக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் பதவி கேட்டதாகவும் அதற்கு ஒப்பந்தம் செய்ததாகவும் முன்னாள் அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார். இது அபாண்டமாகும் இப்படி ஒரு பதவி யாரிடமும் கேட்கவுமில்லை. அது தொடர்பான ஒப்பந்தம் எதுவும் இல்லை அப்படி பதவி கேட்கவுமில்லை.

பதவியை எதிர்பார்த்து நாங்கள் அமைக்கப் போகும் அரசாங்கத்தில் வேலை செய்ய மாட்டோம். அரசாங்கத்தில் ஒரு வெறும் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து மக்களுக்கான பணியைச் செய்வோம். எங்களுக்கு அமைச்சுப் பதவி தேவை இல்லை. அதற்காக நாங்கள் ஒப்பந்தங்கள் ஏதும் செய்ய வில்லை.

நாங்கள் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் எல்லாம் சமூக நலன் சார்ந்ததாகும். நாங்கள் ஏன் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கிறோம் என்பதற்கு நிறைய காரணங்கள் இருக்கின்றன என்றார்.

## தந்திர சூழ்ச்சியில் சிக்கிவிடக்கூடாது

யாழ். ஊடக அமையத்தில் செவ்வாய்க்கிழமை (20) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் பொது வேட்பாளர் தமிழ் மக்கள் மத்தியில் எவ்வாறு செல்வாக்கு செலுத்தப் போகிறது என்பது தொடர்பில் ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கையில்,

பொதுக் கட்டமைப்பு என்று கூறிக்கொண்டு ஒப்பந்தம் செய்த கட்சிகளும் சிவில் அமைப்புகளும் இன்று தனித்தனியே ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து வருகின்றன. அதன் மர்மம் என்ன என்று தெரியவில்லை

குறிப்பாக தமிழ் கட்சிகள் என்று கூறிக்கொண்ட சிலரும் சிவில் அமைப்பினர் என்று கூறிவரும் சிலரும் பொதுக்கட்டமைப்பு என்ற ஒரு வரையை உருவாக்கி அதனூடாக இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாக்கியசெல்வம் அரியநேந்திரனை வேட்பாளராக இழுத்து வைத்துள்ளனர். ஆனால், இப்போது வேட்பாளர் குறித்து மக்கள் மத்தியில் எவ்விதமான கரிசனையும் இல்லை. ஏனெனில் பொதுக் கட்டமைப்பு என்றவர்கள் சோரம் போகின்றனர். என்பதும் இன்னொரு தென்னிலங்கை தேசியக் கட்சியின் ஜனாதிபதி வெற்றிக்கு இவர்கள் வழிவகை அமைத்துக் கொடுப்பதற்கான முகவர்களாகவே இப்பொதுக்கட்டமைப்பு என்ற அமைப்பு இயக்கப்படுகின்றது என்பதும் வெளிப்பட்டுள்ளது.

அதேநேரம் அதை முன்னெடுத்தவர்கள் மத்தியில் தற்போது ஒருமித்த கருத்தும் இல்லை. அவர்கள் ஒப்பந்தங்கள் என்ற தந்திரத்தைச் செயற்படுத்தி, பின்னர் தனித்தனியே அணிகளாகச் செயற்படுகின்றனர் என்றார்.

## “ராஜபக்ஷ குடும்பமே ரணிலிடம் ஒப்படைத்தது”

மொட்டு உட்பட அனைத்து அரசியல் கட்சிகளும் நாட்டில் மீண்டும் அரசியலுக்கு வரக் கூடிய முறைமையை தற்போதைய ஜனாதிபதி உருவாக்கியுள்ளதாக அமைச்சர் வலியுறுத்தினார்.

குருநாகல் மாவட்டத்தின் நிகவெரட்டிய தொகுதியில் கூட்டு ஜனாதிபதி தேர்தல் குழுக்களை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் திங்கட்கிழமை (19) இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“இங்கு வந்தவர்கள் அனைவரும் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவாகவே வந்திருக்கின்றனர். நான் ரணில் விக்ரமசிங்கவின் மேடையில் ஏறும் போது நீங்கள் எந்தக் கட்சியை பிரதிநிதித்துவ படுத்துகிறார்கள் என்று எல்லோரும் கேட்கிறார்கள். நாங்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவபடுத்துகிறோம். நாங்கள் அந்தக் கட்சியை விட்டு விலகவில்லை.இந்த தேர்தலில் ரணில் விக்ரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையான நிலைப்பாடு உள்ளதென்றார்.

கட்சியில் இருந்து நீக்கினால் என்ன செய்வீர்கள் என சிலர் கேட்கின்றனர். இது தொடர்பாக நாங்கள் ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளோம். அதற்காக கூட்டணியும் தனிக்கட்சியும் உருவாக்க உள்ளோம்.

2015ஆம் ஆண்டு மஹிந்த தோல்வி அடைந்த போது, எமது கட்சியின் பொறுப்பாளர்கள் மகிந்தவை கைவிட்டு விட்டு விட்டனர். அப்போது ஏகப் பொறுப்பாளராக இருந்த நான் மஹிந்த சுலோகத்தை எடுத்துக்கொண்டு நாடு முழுவதும் சென்றேன் என்றார்.

அவர் போரை முடிவுக்குக் கொண்டுவந்ததால் நாங்கள் எங்கள் கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதால் நாங்கள் அதைச் செய்தோம். நாங்கள் எப்போதும் தவறு செய்தோம். நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டோம். ஆட்சிக்கு வந்ததும் அது மறைந்துவிடும்.

மஹிந்தவை ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு மொட்டுக் கட்சியை உருவாக்க நாடு முழுவதும் சென்றவன் நான். 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு கோட்டாபய ராஜபக்ஷவைக் கொண்டுவர வேண்டாம் என்று கூறியவன் நான். என்னால் போட்டியிட முடியாது என்று அவர் கூறியபோதும் குடும்பம் ஒன்று கூடிப் பேசி கோட்டாபய நிறுத்துவோம் என்றனர். அதற்கு நாங்கள் அப்போது சம்மதித்தோம். அவரை வெற்றிக்கு அழைத்துச் சென்றோம். பிறகு பாராளுமன்ற தேர்தலிலும் வெற்றி பெற்றோம். இரண்டு வருடங்கள்தான் அதிகாரத்தை நிலைநாட்ட முடிந்தது.

நம் தலைவர்கள் நம்மை விட்டுப் பிரிந்துவிட்டனர். 2019ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானார், மஹிந்த ராஜபக்ஷ பிரதமரானார், பசில் ராஜபக்ஷ நிதி அமைச்சரானார், சமல் மற்றும் நாமல் இருவரும் அந்த அமைச்சரவையில் இருந்தனர். நானும் அங்கே இருந்தேன். உரப்பிரச்சினை வந்தபோது அதுபற்றி பேசியபோது எங்களின் கருத்துக்கு மதிப்பளிக்கப் படவில்லை. அவர்களின் எண்ணத்துக்கேற்பவே பணியாற்றினார்கள். பௌத்த துறவி, வைத்தியர், ஆசிரியர், விவசாயி, தொழிலாளர் ஆகிய ஐந்து பெரும் சக்திகளுடன் மொட்டைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறோம். விவசாயி கள், ஆசிரியர்கள், தொழிலாளர்களை இழந்தோம்.

மக்கள் எமக்கு அதிகாரம் கொடுத்தாலும் எமது தலைவர்கள் எம்மை பாதுகாத்தார்களா என்ற பிரச்சினை உள்ளது. நாங்கள் 2022 மே 09 க்கு முந்தைய நாள், மொட்டைச் சேர்ந்த சில பலமானவர்கள் ஒன்றிணைந்து எமது கட்சி உறுப்பினர்களை அலரி மாளிகைக்கு வருமாறு கேட்டுக் கொண்டனர். ஒடுக்கப்பட்ட மக்களை மேலும் ஒடுக்காமல் நீங்கள் அதைச் செய்யக்கூடாது என்று நான் எதிர்ப்பு தெரிவித்தேன். அதிகாலையிலேயே நான் மஹஜந்தவிடம் சென்று அப்படிச் செய்ய வேண்டாம் என்று சொன்னேன். அன்று செய்தது தேவையில்லாத காரியம். அன்று என்ன நடந்தது, எங்கள் உறுப்பினர்கள் தாக்கப்பட்டனர்.

வெட்கமாக இருந்தது. வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டது. மக்கள் இறந்தனர்.

அது கைமாறி இரண்டரை வருடங்கள் கடந்துள்ள நிலையில் ஜனாதிபதி தேர்தல் வரும்போது இந்த நாட்டை கட்டியெழுப்பிய தலைவரை வேண்டாம் என்று சொல்வதற்குத் தார்மீக உரிமை இல்லை. மொட்டு உட்பட அனைத்து அரசியல் கட்சிகளும் வீதியில் இறங்கி அரசியல் செய்யக்கூடிய சூழலை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உருவாக்கினார்.

## இலங்கை-இந்தியாவுக்கு இடையில் ஒப்பந்தம்

இலங்கை எல்.டி.எல் ஹோல்டிங் நிறுவனம் (LTL Holdings Limited, Sri Lanka) மற்றும் இந்தியாவின் பெட்ரோநெட் எல்.என்.ஜி நிறுவனம் (Petronet LNG Limited, India) ஆகியவற்றுக்கு இடையிலேயே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர மற்றும் இலங்கைக்கான இந்தியப் பிரதி உயர்ஸ்தானிகர் ஆகியோரின் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

## செலவுக்கான அறிக்கை இன்றேல் குற்றவாளி

ஒரு வேட்பாளர் குறிப்பிட்ட நேரத்திற்கு முன் தகவல்களைச் சமர்ப்பிக்கத் தவறினால் மற்றும் தவறான தகவல்களைச் சமர்ப்பித்தால், ஒரு லட்சம் ரூபாய் அபராதம் அல்லது பதவி இழப்பு, மூன்று ஆண்டுகள் வாக்குரிமை இழப்பு அல்லது வேட்பாளராக இருக்கும் உரிமையை இழக்க நேரிடும் என்று தேர்தல் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

நிதி, பொருள் அல்லது கடன் அடிப்படையில் பெறப்பட்ட அனைத்து தகவல்களையும் சேர்த்து இந்த அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு உதவியவர்கள் குறித்த தகவல்களை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

தொகைக்கு மேல் பணம் செலவழித்தால், வேட்பாளர் குற்றவாளியாகி விடுவார் என்று ஆணையத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

## ரூ.300 மில்லியன்...

தமது கண் பார்வை இழப்பு மற்றும் அதனால் தமது உயிருக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகளின் பொருட்டு முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் 10 பேரிடமிருந்து 300 மில்லியன் ரூபாவை கோரியே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கெஹலிய ரம்புக்வெல்ல, ஜனக சந்திரகுப்த, தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணைக்குழு, பேராசிரியர். எஸ். டி. ஜயரத்ன, வைத்தியர்களான விஜித் குணசேகர, அசேல குணவர்தன, ரொஹான் எதிரிசிங்க, மகேந்திர செனவிரத்ன, சாமி கெமிஸ்ட் (தனியார்), இந்தியன் ஓ.பி.எல். எல். ஆகியோரை இந்த வழக்கின் பிரதிவாதிகளாக சட்டமா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

தாம் நுவரெலியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05ஆம் திகதி நுவரெலியா பொது வைத்தியசாலையின் மருத்துவ ஊழியர்களால் கண்புரை சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதாக கந்தபொல பிரதேசத்தைச் சேர்ந்த மனுதாரர் மக்கரி ராஜரத்தினம் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

அறுவை சிகிச்சை முடிந்து ஏப்ரல் 06. 2023 அன்று அவர் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டதாகவும், இந்தியாவானா Opthalmics LLP இந்தியா தயாரித்த Prednisolone அசிடேட் கண் சொட்டு மருந்துகளைப் பயன்படுத்த நுவரெலியா வைத்தியசாலையின் மருத்துவர்களால் அறிவுறுத்தப்பட்டதாகவும் வைத்தியசாலை அந்த மருந்தைத் தனக்கு கொடுத்ததாகவும் வாதி கூறினார்.

குறித்த சொட்டுகளைப் பலமுறை பயன்படுத்திய பிறகு, ஏப்ரல் 19.2023 அன்று அல்லது அதற்கு அடுத்த நாள் அவருக்கு கண்ணீர், அசௌகரியம், வலி மற்றும் தலைவலி ஏற்பட்டதாக அவர் மேலும் கூறினார்.

2023ஆம் ஆண்டு மே 10ஆம் திகதி தேசிய கண் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, கூடுதல் மருத்துவப் பரிசோதனைகளைச் செய்த பின், அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, மேற்கூறிய ப்ரெட்னிசோலோன் அசிடேட் கண் சொட்டு மருந்து மூலம் அவர் படிப்படியாகப் பார்வை இழப்பதைக் காண முடிந்தது என்று வாதி மேலும் கூறினார்.

பதினொரு பிரதிவாதிகளிடமிருந்தும் நட்டஈடு பெற்றுத் தருமாறு கோரி, இன்விக்டஸ் சட்ட நிறுவனத்தின் சட்டத்தரணிகளான சம்பத் விஜேவர்தன, தமலி குருப்பு மற்றும் பிரவிங்க ரத்னசேகர ஆகியோரின் ஊடாக மனுதாரர் இந்த வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளார்.

## அசோக பிரியந்த...

நாமல் ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க முன்னர் தீர்மானித்திருந்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் அலரிமாளிகையில், செவ்வாய்க்கிழமை(20) இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு தனது தீர்மானத்தை அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

## 109 ரூபாவை விஞ்ச முடியாது

இதன்படி, தேர்தல் பிரசாரத்தின் போது ஒரு வாக்காளருக்காக வேட்பாளர் ஒருவர் 109 ரூபாவையே செலவிட முடியும் என அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகள் மற்றும் வேட்பாளர்களுக்கிடையே அண்மையில் இடம்பெற்ற நிலையில் குறித்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இதன்படி, வேட்பாளர் ஒருவரின் மொத்த செலவினமாக 186 கோடியே 82 இலட்சத்து 98 ஆயிரத்து 500 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## சஜித்துக்கு உழைக்காத...

சட்டத்தரணி நிஸாம் காரியப்பர், பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸுக்கு, இது தொடர்பில் செவ்வாய்க்கிழமை(20) கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதென முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ள நிலையில், சஜித் பிரேமதாசவின் வெற்றிக்காகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரும் உழைக்க வேண்டுமெனக் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் அறிவுறுத்தியிருந்தார்.

இருந்தபோதும், சஜித் பிரேமதாசவை ஆதரித்து நடத்தப்பட்ட எந்தவொரு கூட்டத்திலும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் இதுவரையில் கலந்து கொள்ளவில்லை.

ஆயினும் அம்பாறை மாவட்டத்தின் மற்றைய பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் ஆகியோர் கட்சித் தலைவருடன் இணைந்து, சஜித் பிரேமதாசவை ஆதரித்து நடத்தப்பட்ட கூட்டங்களில் கலந்து கொண்டனர்.

மறுபுறமாக, முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா, ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவுக்கு தனது ஆதரவை அறிவித்தமையினால், அவர் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

# குளியலிலே குதூகலம் நீராடலில் புதிய புரட்சி

நிச்சயமாக முதன் முறையாக அறிமுகப்படுத்தும்
நாற்பக்க வடிவில் கருப்பு நிறம் கொண்ட
“ப்லோரல்” (Floral) வடிவில்
கெலின் ப்லொசம் பியூட்டி (Calin Blosssom Beauty)

**CALIN**
**Beauty Soap**

மனதை கொள்ளை கொள்ளும் 4 வகைகளின்
4 வர்ணங்களின் இதமான 4 வாசனைகளில்.....

பாதிப்பை உண்டுபண்ணும் இறசாயணக் கலவைகள் அற்ற
நீண்ட நாட்கள் பாவிக்கத்தக்க
Calin Blosssom Beauty
உபயோகித்து வித்தியாசத்தினை உணருங்கள்.

வாடிக்கையாளர்களின் நலன் கருதி
Calin Blosssom Beauty யின் அறிமுக விலை
ரூ.100/= மட்டுமே



**Rs.100** MRP

GRADE 01 SOAP ★ 76.5% TFM ★ NO HARMFUL CHEMICALS




- Calin Kohomba Soap
- Calin Gold Soap
- Calin Rose Beauty Soap
- Calin White Beauty Soap

கெலின் - மிருதுவான மேனிக்கு மனம் கவரும் இதமான வாசனையுடன் 077 5 1000 80 0762 502 503

# “கறைபடியாத கரங்களுக்கு கைகொடுத்தோம்”



கறைபடியாத கரங்களை அதிகமாகக்கொண்ட அணியை, ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச தலைமைத்துவம் ஏற்று வழிநடத்துவதாலேயே, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அவருக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்ததாக, அக்கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

முசலி, கொண்டச்சியில் திங்கட்கிழமை (19) இடம்பெற்ற “ரிஷாட் பதியுதீன் வெற்றிக்கிண்ண” கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிநாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர்,

“சஜித் பிரமேதாசவுக்கு எமது கட்சியின் ஆதரவை நல்குவதாக அறிவித்த பின்னர், முதன்முதலாக ஒரு பொது நிகழ்வில் பங்கேற்று உரையாற்றக் கிடைத்துள்ளது. இந்தத் தேர்தலில் நாம் ஏமாந்துவிடக் கூடாது. எமக்குள் எத்தகைய கருத்துவேறுபாடுகள் இருந்தாலும் சமூகத்தின் நன்மைகருதி, புத்திசாலித்தனமாக வாக்குகளைப் பிரயோகிக்கும் தருணம் இது. நாம் மிக நிதானமாகச் சிந்திக்க வேண்டியதொரு காலகட்டத்தில் இருக்கிறோம்.

நான்கு வேட்பாளர்களுக்கிடையே தீவிரப் போட்டி நிலவுகின்றது. மூவரை நிராகரித்து, நாம் சஜித்துக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்தமைக்கான காரணங்கள் பல உண்டு. கடந்த காலங்களைப் போன்று, எதிர்காலத்தில் இனவதப் பிசாசு தலையெடுத்து, சிறுபான்மைச் சமூகத்தை துவம்சம் செய்யக் கூடாது.

ஜனாஸாக்களை எரிக்கும் அரசியல் கலாசாரம் மீண்டும் உருவெடுக்கக் கூடாது. சகல சமூகங்களையும் அரவணைத்து செல்லக்கூடிய தலைவரையே நாம் தெரிவுசெய்துள்ளோம். மையத்துக்கள் எரிந்துகொண்டிருந்தபோது, அமைச்சரவையில் பக்கவாத்தியம் இசைத்துக்கொண்டிருந்தவர்கள் ரணிலுடன் சேர்ந்துள்ளனர்.

கோட்டாவின் 20ஆவது திருத்தம் 3/2 பங்கினால் நிறைவேற்றப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருந்தபோது, நமது சமூகத்தைச் சார்ந்த 6 உறுப்பினர்கள் ஆதரவளித்து, 144 என்ற எண்ணிக்கையிலிருந்த கோட்டாவின் அரசுக்கு 150 என்ற எண்ணிக்கையை பெற்றுக்கொள்ளச் செய்தனர். அவர்களும் இப்போது ரணிலின் அணியில் இணைந்து நமது சமூகத்துக்காக நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர்.

கள்வர்களின் கூடாரத்தில் இருந்த பல முன்னாள் அமைச்சர்கள் ரணிலுடன் தற்போது இணைந்து, இனிப்பான கதைகளைப் பேசி சிறுபான்மை சமூகத்தின் வாக்குகளை வசீகரிக்க முற்படுகின்றனர். எனவே, இந்த அணிக்கு நாம் வாக்களிக்க முடியுமா?

ஆயுதக் கலாசாரத்தைக் கையிலெடுத்து, இந்த நாட்டிலே ஜனநாயகத்தைக் கொலை செய்தவர்கள், இப்போது ஜனயாகம் பற்றி வாய்கிழியக் கத்துகின்றனர். இவர்களை நம்ப முடியுமா?

அபிவிருத்திக்கும் அற்ப விடயங்களுக்காகவும் நாம் ஏமாந்துவிடக் கூடாது. இது மக்கள் பணம். ஆட்சியாளர்களின் பணம் அல்ல என்பதை புரிந்துகொள்ளுங்கள்.

இன்று சிறுபான்மைச் சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெரும்பாலான சமூகத் தலைவர்கள் சஜித் அணியுடன் கைகோர்த்துள்ளனர். பிரமேதாச, மஹிந்த ராஜபக்ஷ போன்றவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மைச் சமூக வாக்குகளால் வெற்றிபெற்றது போன்று, இம்முறையும் சஜித் பிரேமதாசவின் வெற்றி, சிறுபான்மைச் சமூகங்களின் வாக்குகளாலேயே ஈடேறும் என்பதை மனதில் நிறுத்தி ஒற்றுமையுடன் வாக்களியுங்கள்” என்று கூறினார்.

இந்நிகழ்வில், வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ரிப்கான் பதியுதீன் மற்றும் மக்கள் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள், ஊர்ப்பிரமுகர்கள், ஆதரவாளர்கள் உட்பட பெருந்திரளான பொதுமக்களும் பங்கேற்றிருந்தனர்.

## காலமானார்



பிரபல மேடை நாடக கலைஞரும், வெள்ளி நிலா கலாலயத்தின் ஸ்தாபகருமான ஆர்.இராஜசேகரன் காலமானார்.

இவர் பிரபல சினிமா மற்றும் நாடக கலைஞரான ஹெலன் குமாரியின் கணவராவார். கடந்த சில மாதங்களாக சுகயீனமுற்றிருந்த இவர், செவ்வாய்க்கிழமை (20) காலமானார். அன்னாரின் இறுதி கிரியைகள் பற்றிய விபரம் அறிவிக்கப்படும்.

## இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

ரஸீன் ரஸ்மின்

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து, மீன்பிடியில் ஈடுபட்ட 22 இந்திய மீனவர்களையும் அடுத்த மாதம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் மாவட்ட நீதிவான் செவ்வாய்க்கிழமை (20) உத்தரவிட்டார்.

தமிழகம் - தூத்துக்குடியில் இருந்து இரண்டு படகுகளில் வந்து புத்தளம் - கற்பிட்டி வடக்கு கடற்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்கள் கடற்படையினர் கடந்த 5ஆம் திகதி இரவு கைது செய்தனர்.

இதன்போது, அவர்களிடமிருந்து இரண்டு விசைப் படகுகள் கடற்படையினரால் கைப்பற்றியதுடன், கைது செய்யப்பட்ட 22 மீனவர்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு பின்னர் புத்தளம் மாவட்ட நீதிமன்றில் முன்னிறுத்தப்பட்டனர்.

அதன்போது, சந்தேக நபர்களை செவ்வாய்க்கிழமை (20) வரை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் மாவட்ட நீதிவான் உத்தரவிட்டிருந்த நிலையில், செவ்வாய்க்கிழமை (20) அன்று மீண்டும் புத்தளம் மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, அவர்களின் விளக்கமறியலை நீடிக்க நீதிவான் உத்தரவிட்டார்.



## ஆசிரியர்கள் கௌரவிப்பு...

கொட்டகலை தமிழ் மத்தியக் கல்லூரியில் அதிபர் பாலசுந்தரம் சேவையாற்றிய 1990 மற்றும் 1998ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடமையாற்றிய ஆசிரியர்கள், அகவை அறுபதில் கால்பதித்த ஆசிரியர்கள் மற்றும் 25 ஆண்டுகள் சேவையை பூர்த்தி செய்த ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (11) கொட்டகலையில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் நடைபெற்றது. இந்நிகழ்வு, ஆசிரியர்களான பரமசிவம், ஜூட், ராம், வசந்தி, யோகா ஆகியோரால் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக சாரதிகளுக்கு விழிப்புணர்வு

எம்.எஸ்.எம்.நூர்தீன்



சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக சாரதிகளுக்கு விழிப்புணர்வூட்டல் நிகழ்வொன்று “சாரதியின் இரு கரங்கள் மூலம் பிள்ளைகளை பாதுகாத்திடுவோம்” எனும் தொனிப்பொருளில் உதவி மாவட்டச் செயலாளர் ஜீ.பிரணவன் தலைமையில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (19) இடம் பெற்றது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் மாவட்ட செயலும் இணைந்து சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்குப் போக்குவரத்து வசதிகளை வழங்கும் வாகன சாரதிகளுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

இதன்போது நாடளாவிய ரீதியில் சிறார்களின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் முகமாகவும் துஷ்பிரயோகம் இடம் பெறாவண்ணம் முற்தடுப்பு மேற்கொள்வதற்கும் தேவையான ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட உள சமூக உத்தியோகத்தர் ஆர். பிரபாகர் , மற்றும் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம்.ஆர். நிஷா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பால் குடித்த பாலகி பலி

தாய்ப்பால் புரக்கேறியதில் கபிலன் நிவேதா என்ற மூன்றரை மாத பெண் சிசுஉயிரிழந்த சம்பவம் யாழ்ப்பாணம், மிருசுவில் வடக்கில் செவ்வாய்க்கிழமை(20) இடம்பெற்றுள்ளது.

பாலூட்டியபோது சிசு மயங்கி விழுந்ததால், சிசுவை சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. அப்போதும் சிசு உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் கூறியுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.






## “சேவலை விடமாட்டேன்”

ஆ.ரமேஸ்



வேலு யோகராஜ் என்ற பெயரை சமூகத்திற்கு விளங்கச் செய்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸை விட்டு ஒருபோதும் விலகிச் செல்ல மாட்டேன்.

என நுவரெலியா பிரதேச சபையின் முன்னால் தலைவர் வேலு யோகராஜ் தெரிவித்தார்.

தனது பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் சில இணையத்தள சமூக ஊடகங்களில் செய்திகள் பரப்பப்பட்டுள்ளது. இதை கண்டித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நுவரெலியா இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மாவட்ட காரியாலயத்தில் செவ்வாய்கிழமை (20) மதியம் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு விளக்கமளித்த வேலு யோகராஜ் மேலும் தெரிவித்ததாவது,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரனில் விக்ரமசிங்கவை ஆதரிக்க இ.தொ.கா தீர்மானம் எடுத்துள்ள நிலையில், நுவரெலியா மாவட்டத்தில் முன்னெடுக்க வேண்டிய பொறுப்புக்கள் காங்கிரஸ் உயர் பீடத்தால் எனக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நான் காங்கிரஸை விட்டு விலகிவிட்டேன் எனவும், ஜனாதிபதித் தேர்தலில் சஜீத் பிரேமதாசவை ஆதரிக்க போவதாகவும், அவர்களின் கட்சியில் இணைந்து விட்டதாகவும் பொய்யான செய்திகள் பரப்பப்பட்டு எனது பெயருக்கு கலங்கத்தை ஏற்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறாக சமூக வலைத்தளங்களில் உள்ள சில இணையத்தள, ஊடகங்களில் என் மீது பிழையான கருத்தை தெரிவித்து செய்திகள் பரப்பப்படுகிறது இதனை வன்மையாக கண்டிக்கின்றேன்.

அதேநேரத்தில், கடந்த காலத்தில் நாடு எதிர்நோக்கிய பொருளாதார சிக்கலில் இருந்து நாட்டில் அனைத்து மக்களையும் காப்பாற்ற முன் வந்த ஜனாதிபதி ரனில் விக்ரமசிங்க அவர்களுக்கு நுவரெலியா மாவட்ட மக்கள் முன்வந்து வாக்களித்து வெற்றிப்பெற செய்ய வேண்டும் என மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

அத்துடன் ரணில் விக்ரமசிங்கவை தவிர வேறு எவருக்கும் ஆதரவு வழங்கையும் மாட்டேன். இ.தொ.காவை தவிர வேறு எந்த கட்சியுடனும் இணையவும் மாட்டேன். என உறுதியளித்துள்ளார்.

## விபத்தை ஏற்படுத்திய சாரதி சரணடைந்தார்

எச்.எம்.எம்.பர்ஸான்



வேன் விபத்தில் சிறுவன் மரணித்த சம்பவத்தில் தலைமறைவாகியிருந்த வேன் சாரதி திங்கட்கிழமை(19) அன்று வாகரை பொலிஸார் நிலையத்தில் சரணடைந்துள்ளார். வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிச்சங்கேணி பகுதியில் வைத்து சனிக்கிழமை (17) இடம்பெற்ற விபத்தில் ஓட்டமாவடி, மீராவோடை பகுதியைச் சேர்ந்த எஸ். மஹ்தி என்ற சிறுவன் விபத்துக்குள்ளாகி உயிரிழந்தார்.

இவ்விபத்தை ஏற்படுத்திய வேன் சாரதி வேனுடன் தலைமறைவாகியிருந்ததுடன், அவரை கைது செய்ய வாகரை பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த நிலையில், மூன்று நாட்களின் பின்னர் சாரதி வாகரை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

மேலும் குறித்த சாரதியை வாழைச்சேனை நீதவான் நீதிமன்றில் முன்னிறுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# அடகுக்கான நிவாரணத்தை உனடியாக அமுல்படுத்தவும்

அடகு வைப்பதற்கு ஆயிரக்கணக்கான வருட வரலாறு உண்டு. ஐரோப்பிய மக்கள் தங்கள் குழந்தைகளையும் மனைவிகளையும் பிரபுக்களிடம் அடமானம் வைத்து கடன் வாங்கினார்கள். கடனை அடைக்க முடியாமல் அடமானம் வைத்த மனைவியும் குழந்தைகளும் குறிப்பிட்ட காலத்துக்குப் பிரபுவின் பங்களாவில் வேலை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அடமானம் முடிந்து வீட்டிற்கு வந்தபோது, அடமானத்தில் கட்டப்பட்டிருந்த மனைவிகளும் இளம் பெண்களும் தங்கள் புதிய வயிற்றைப் பிடித்துக் கொண்டிருந்தனர்.

இந்த விடயங்கள் இடைக்கால மக்களுக்குப் பெரிய விடயமாக இல்லை. அப்போது புத்தகத்தில் கையெழுத்துப் போட்டு திருமணம் இல்லை. இந்த நேரத்தில் மனிதனுக்கும் மிருகத்திற்கும் அதிக வித்தியாசம் இல்லை. ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால், மனிதன் தனது உடலை மறைக்கத் துணியைப் பயன்படுத்தினான், நாய் துணி இல்லாமல் விளக்குகளை எரித்து நெடுஞ்சாலையில் காட்டுத்தனமாக ஓடியது.

சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பு, சீனாவின் ஒவ்வொரு பெரிய நகரத்திலும் அடகுக்கடைகள் இருந்தன. அதுமட்டுமின்றி, இலங்கையில் கந்துவட்டிக்காரரர்கள் போன்ற சுதந்திரமான கடன் வழங்குபவர்களும் சீனாவில் இருந்தனர். இவர்கள் அனைவரும் தங்கத்தைக் கடன் வாங்கினர். அப்போது நில அடமானம் இல்லை. காரணம் நிலத்தில் மக்களுக்குத் தனி உரிமை இல்லை. நாட்டில் உள்ள அனைத்து நிலங்களும் அரசனுடையது. அந்நாட்டு மக்கள் அந்த நிலங்களில் வீடு கட்டி நெல் பயிரிட்டு அதில் ஒரு பகுதியை மன்னனுக்கு 'தனம்' என்று அனுப்பி வைத்தனர்.

இலங்கையில் காணி உரிமையானது சீனாவின் காணி உரிமையைப் போன்றே இருந்தது. நாட்டில் உள்ள அனைத்து சொத்துக்களுக்கும் அரசன் சொந்தக்காரன். அந்த நிலங்களில் நாட்டு மக்கள் வாழ்ந்தனர். இந்த நேரத்தில், தங்கத்தின் நிலை மிகவும் மோசமாக உள்ளது. அந்த நேரத்தில் தங்கத்தைச் சுத்திகரிக்கும் முறை இல்லை.

இலங்கையில் அண்மைக்காலமாக அடமான வியாபாரம் உச்சத்திற்குச் சென்ற சந்தர்ப்பமாக கொரோனா யுகத்தை அழைக்கலாம். இந்த நேரத்தில் நாடு மூடப்பட்டதால், மக்கள் தங்கள் பொருட்களை அடகு வைத்து வாழ வேண்டியிருந்தது. 2019 ஆம் ஆண்டு இந்நாட்டு மக்கள் தங்களுடைய தங்கப் பொருட்களை அடகு வைத்து 210 பில்லியன் ரூபாவைப் பெற்றுள்ளனர்.

இந்த ஆண்டு மார்ச் இறுதிக்குள், பொருட்களை அடகு வைத்துப் பெற்ற தொகை 571 பில்லியனாக உயர்ந்துள்ளது. பொதுவாக, நாட்டின் பொருளாதார நெருக்கடி மிகவும் கடுமையானதாக இருக்கும்போது அடமானங்கள் அதிகரிக்கும். வங்கிகள் கடனுக்காக மக்களை அச்சுறுத்துகின்றன. பொருட்களைச் சேமிப்பதற்கும், வட்டிக்குக் கூட பணம் செலுத்துவதற்கும் மக்களிடம் பணம் இல்லை.

சில பெண்கள் தங்களிடம் இருந்த கடைசி தங்கப் பொருளை, ஒரு ஜோடி காதணிகளை அடகு வைத்து, மூன்று அல்லது ஐந்து கிலோ கிராம் அரிசி வாங்கி வீட்டு வயிற்றை நிரப்பினர். பொருட்களை அடகு வைக்கும் போது வங்கி நியாயமான தொகையை வட்டியாக வசூலிக்கும் போது, நிதி வசதி தரும் நிதி நிறுவனங்களும், சிறு பெட்டிக்கடைகளும் பெரும் வட்டியைச் சுரண்டுகின்றன. ஆகையால், அடகு வைக்கப்பட்ட தங்கத்துக்கான நிவாரணங்களை அரசாங்கம் உடனடியாக அமுல்படுத்த வேண்டும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






எம்.எஸ்.எம்.ஐயூப்

# நமது அறிவை பரீட்சிக்கும் மாதம்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிப்பதற்கான ஒப்பந்தம் ஒன்று அவ்விரு சாராருக்கும் இடையில் கடந்த வாரம் கைச்சாத்திடப்பட்டதாக சில ஊடகங்கள் தெரிவித்தன.

இது ஏதோ நாட்டில் ரணிலுக்கான ஆதரவு பெருகுவதையே குறிக்கிறது என்பதைப் போல் அவ்வூடகங்கள் அச் செய்தியை வெளியிட்டிருந்தன. ஆனால், ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற முதல் இ.தொ.கா. அவரையே ஆதரிக்கிறது.

இது போன்ற ஏமாற்று வித்தைகளில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் ஈடுபட்டு வருகிறது. மலையக மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காகவென இ.தொ.கா. தவிர்ந்த ஏனைய மலையக கட்சிகளுடன் சஜித பிரேமதாச கடந்த பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார்.

அப்போது ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டு இருக்கவில்லை. ஆயினும், ஏற்கெனவே சஜித் ஜனாதிபதித் தேர்தல் பிரசார பணிகளை ஆரம்பித்து இருந்தார். அத்தோடு, அம்மலையகக் கட்சிகளும் அவருக்கே ஆதரவு தெரிவித்து வந்தன. எனவே, இந்த ஒப்பந்தமானது அந்த மலையகக் கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலில் சஜித்தை ஆதரிப்பதை மேலும் உறுதி செய்வதாக அமைந்தது.

இதனையடுத்து, சஜித்தை ஆதரித்து வந்த சில கட்சிகளின் மத்தியக் குழு போன்ற குழுக்கள் கூடி சஜித்தை ஆதரிக்கப் பிரேரணைகளை நிறைவேற்றியதாக ஊடகங்களை அழைத்து அறிவித்து இருந்தது.

இவ்வாறு இருக்க, சஜித்தை ஆதரிக்கும் சகல கட்சிகளும் ஒன்றிணைந்து ஐக்கிய மக்கள் கூட்டணி என்ற கூட்டணியை உருவாக்கியதாக இம்மாதம் 8ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. அதிலும், இம்மலையகக் கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும் உள்ளடக்கப்பட்டு இருந்தன.

இவ்வறிவிப்புக்காக பல இலட்சம் ரூபாய் செலவிட்டு கொழும்பு சுகததாச உள்ளரங்கில் பாரியதோர் கூட்டமும் நடத்தப்பட்டது. சஜித்துக்கு ஆதரவு தெரிவிக்கும் கட்சிகளின் தலைவர்கள் அப்போது தமது ஆதரவை அவருக்குத் தெரிவித்து ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிட்டனர்.

இம்மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களும் அதில் கையொப்பமிட்டனர்.

இக்கூட்டணியின் மூலம் சஜித்துக்கு ஆதரவு பெருகி வருவதாகக் காட்ட ஐக்கிய மக்கள் சக்தி முயன்ற போதும் ஏற்கனவே சஜித்தை ஆதரித்தவர்களை தவிர ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஒரு பிரிவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தயாசிறி ஜயசேகரவும் ஸ்ரீலசுக உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஒரு பிரிவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் திலங்க சுமதிபாலவுக்கு மட்டுமே புதிதாக இக்கூட்டணியில் இணைந்தனர். டலஸ் அலஹப்பெருமவும் பாராளுமன்றத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற போது சஜித்துடன் இணைந்திருந்தார்.

இவ்வாறு மலையகத் தலைவர்கள் சஜித்துக்கு ஆதரவு தெரிவித்து இரண்டு ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டு இருந்த நிலையில், மலையக மக்களின் மேம்பாட்டுக்காகக் கடந்த 12ஆம் திகதியும் அவர்கள் சஜித் பிரேமதாசவுடன் மற்றொரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டனர். இதுவும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டே செய்து கொள்ளப்பட்டன.

அதேபோல், ஐக்கிய தேசிய கட்சியும் சுயேச்சையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து அண்மையில் பிரேரணை ஒன்றை நிறைவேற்றியது.

ரணில் விக்ரமசிங்க எதற்காக சுயேச்சையாகப் போட்டியிடுகிறார் என்பது அவருக்கு மட்டும் தான் தெரியும். அவர் இன்னமும் ஐ.தே.க. தலைவராக இருக்கிறார். இவ்வாறிருக்க, ஐ.தே.க. ரணிலுக்கு ஆதரவு தெரிவித்து பிரேரணையை நிறைவேற்றுவதானது ரணில் ரணிலுக்கு ஆதரவு தெரிவிப்பதேயன்றி வேறொன்றுமல்ல.

ஒரு கட்சி மற்றொரு கட்சிக்குத் தேர்தலொன்றின் போது, ஆதரவு தெரிவிப்பதை உத்தியோகப்பூர்வமாக முடிவு செய்ய வேண்டும் என்பதற்காக இவ்வாறு ஐ.தே.கவும் சஜித்தை ஆதரிக்கும் கட்சிகளும் பிரேரணைகளை நிறைவேற்றி இருந்தால் அது அக்கட்சிகளின் உட்கட்சிப் பிரச்சினையாகும். ஊடகங்களை அழைத்து அதனைப் பிரசார உத்தியாகப் பாவிப்பது மக்களை ஏமாற்ற எடுக்கும் முயற்சியே அன்றி வேறொன்றும் அல்ல.

ஐக்கிய மக்கள் கூட்டணி அறிவிக்கப்பட்டதன் பின்னர், மேலும் 27 கட்சிகள் சஜித்துடன் சேரவிருப்பதாக செய்திகள் கூறின. அதற்குப் போட்டியாக 34 கட்சிகள் ரணில் விக்ரமசிங்கவுடன் இணையவுள்ளதாக மற்றொரு செய்தி கூறியது. இந்நாட்டில் அவ்வளவு அரசியல் கட்சிகளா? இருக்கின்றன.

ஆனால் அவற்றில் பெரும்பாலானவற்றை முச்சக்கர வண்டி கட்சி என்றே பலர் அழைக்கின்றனர். அதாவது அவற்றின் அத்தனை உறுப்பினர்களும் ஒரு முச்சக்கர வண்டியில் அழைத்துச் செல்லலாம் என்பதாகும்.

எனவே, அவரை இத்தனை கட்சிகள் ஆதரிக்கின்றன, இவரை இத்தனை கட்சிகள் ஆதரிக்கின்றன என்ற செய்திகள் எல்லாம் வெறும் மக்களை ஏமாற்றும் கதைகள் மட்டுமேயாகும்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலின்போது, ரணில் சுயேச்சையாகப் போட்டிப் போடாவிட்டால், தாம் அவரை ஆதரிப்பதில்லை என்று 2007இற்கு முதல் பதவிக்கு வந்த சகல அரசாங்கங்ளிலும் அமைச்சராக இருக்கும் மஹிந்த அமரவீர ஒரு கொள்கை வாதியைப் போல் கூறியிருந்தார்.

ஆயினும், அவரும் மேலும் சில அமைச்சர்களும் ரணிலை ஆதரித்தன் காரணமாகக் கடந்த வருடம் ஸ்ரீலசுக பிளவுபட்டது. இவ்வாறு அரசியல் களத்தில் 90 சதவீதத்துக்கு மேற்பட்ட நடவடிக்கைகளும் கூற்றுக்களும் போலி தன்மையையும் பொய்யையும் அடிப்படையாகக் கொண்டவையாக அமைந்துள்ளன.

இவற்றில் கடசித் தாவல்களே மிகவும் அநாகரீகமானவையாகக் காணப்படுகின்றன. ரணில் விக்ரமசிங்கவை சிறையில் அடைக்கும் வரை தமக்குத் தூக்கம் வராது என்று கூறிய மஹிந்தானந்த அளுத்கமகே போன்ற மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் பலர் இப்போது ரணிலை ஆதரிக்கின்றனர். தாமே முதன் முதலில் மத்திய வங்கி பிணை முறி மோசடியை அம்பலப்படுத்தியவர் என்று கூறிய பந்துல குணவர்தனவும் அதில் ஒருவர்.

ரணில் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டியவர் என்பதே அவர்களது வாதமாக இருக்கிறது. அதுவே ரணிலினதும் பிரதான தேர்தல் துரும்பாக உள்ளது. ரணில் ஜனாதிபதியாகியதன் பின்னர் எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்கான வரிசைகள் இல்லாமல் போனதையே அவர்கள் இதற்கு ஆதாரமாக எடுத்துக் காட்டுகிறார்கள்.

ரணில் நாட்டை அபிவிருத்தி செய்து, வரிசைகளை இல்லாமல் செய்தார்? அவர் பதவிக்கு வந்ததன் பின்னர், ஒரு அங்குல நிலம் புதிதாக பயிரிடப்படவில்லை. முன்னரை விட ஒரு துரும்பையாவது கைத்தொழில் துறை மூலம் உற்பத்தி செய்யப்படவில்லை. பொருளாதார நெருக்கடிக்கு முன்னர்

இருந்த நிலைக்கு இன்னமும் ஏற்றுமதி வருமானமோ அல்லது உல்லாசப் பிரயாணத் துறையின் வருமானமோ அதிகரிக்க வில்லை.

அவ்வாறாயின், என்ன நடந்தது? இலங்கைக்கு ஒரு டொலரேனும் கடனாக வழங்குவதில்லை என்ற நிலையிலிருந்த உலக வங்கி போன்ற சர்வதேச நாணய நிறுவனங்கள் கோட்டாபய சர்வதேச நாணய நிதியத்துடன் ஆரம்பித்த வேலைத் திட்டத்தை அடுத்து கடன் வழங்க முன்வந்துள்ளன.

முன்னர் பெற்ற கடன்களை திருப்பிச் செலுத்தாது, இறக்குமதிகளை நிறுத்தி புதிதாகக் கடனாகப் பெற்ற வெளிநாட்டுப் பணத்தைப் பாவித்து எரிபொருட்களையும் எரிவாயுவையும் இறக்குமதி செய்ததன் மூலம், அப்பொருட்களுக்கான வரிசைகளை இல்லாமல் செய்ய முடிந்தது. அவ்வளவு தான்.

பொருளாதார நெருக்கடியின் உச்சக் கட்டத்தில் மும்மடங்காக ஏறிய பொருட்களின் விலை குறையவில்லை. சில பொருட்களின் விலை மட்டும் மிகச் சிறிதளவு குறைந்துள்ளன. 2027 இலிருந்து இலங்கை பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டும். அதற்கு அரசாங்கத்திடம் எவ்வித திட்டமும் இல்லை.

பொருளாதார நெருக்கடியின் காரணமாக மக்களால் முற்றாகவே வெறுக்கப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி இனி பதவிக்கு வரும் வாய்ப்பு தென்படவில்லை. எனவே, அக்கட்சியில் இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் வேறு வழியின்றி ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்துள்ளனர்.

முன்னர் ரணிலைத் திட்டித் தீர்த்த அவர்கள், இப்போது தமது செயலை நியாயப்படுத்த ரணில் நாட்டை மீட்டெடுத்ததாகக் கூறுகிறார்கள்.

கொள்கை காரணங்களுக்காகவன்றி பசில் ராஜபக்ஷவால் தாம் புறக்கணிக்கப்பட்டதன் காரணமாக ஏற்கெனவே பொதுஜன முன்னணியிலிருந்து விலகியிருந்தவர்கள், ஏதோ தாம் பொருளாதாரத்தை அழிவுக்கவோ இனவாதத்தைத் தூண்டவோ எந்தப் பங்களிப்பைச் செய்யாதவர்களைப் போல் நல்ல முகத்தைக் காட்டிக் கொண்டு சில மாதங்கள் இருந்து விட்டு ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்துள்ளனர்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சின்னத்தில் போட்டியிட்டது. அக்கட்சி இம்முறை உத்தியோகப்பூர்வமாக சஜித் பிரேமதாசவை ஆதரிக்க முடிவு செய்துள்ளது.

ஆயினும், அக்கட்சியின் மூன்று எம்.பிக்கள் ரணிலோடு சேர்ந்து கொண்டுள்ளனர். அதற்கு எதிராகத் தலைமை ஏதாவது நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவும் இல்லை.

ஒரு சாரார் அந்தக் குழுவிலும் மற்றைய சாரார் இந்தக் குழுவிலும் எதற்காக இருக்கிறார்கள் என்று எவருக்கும் தெரியாது போலும். இந்நாட்டில் மிகவும் மோசமான இன வாதிகளாக கருதப்படும் விமல் வீரவன்ச மற்றும் கம்மன்பில போன்றவர்கள் அண்மையில் யாழ்ப்பாணத்திற்குச் சென்று மேலாடையின்றி கோயிலுக்குச் சென்றதைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. அவர்கள் மனம் மாறியா இவ்வாறு நடந்து கொள்கிறார்கள்? இதை "வஞ்சனையின் உச்சக் கட்கம்" என்றே கூறவேண்டும்.

ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது. மாறி மாறி நாட்டை அழித்த இனங்களிடையே பகையை வளர்த்த பிரதான கட்சிகள் இன்னும் மாறவில்லை என்பதே அதுவாகும். பொதுமக்களில் சிலரும் ஒரு கட்சியிடம் நூறு சதவீத நேர்மை இல்லை என்று அதனை நிராகரித்து ஐந்து வீத நேர்மையாவது இல்லாதவர்களிடம் எதையும் எதிர்பார்க்காது அவர்களை ஆதரிக்கிறார்கள். நாம் விதைத்தது தான் விளையும். மேலும் ஒரு மாதம் தான் இருக்கிறது.



## வாழ்வியல் தரிசனம்

அறிவைப் பெருக்கி ஆணவத்தைச் சுருக்கு! ஆனால், கல்விமான்களில் ஒருசிலரைத் தவிர ஏனையோர் ஆணவமிடுக்குடன்தான் வாழ்கின்றார்கள். இது பொதுவானது என ஆன்மீகம் விளக்குகின்றது.

கல்வி என்பதே பொதுவுடைமை வரம். பாடசாலைகளில் கல்வி கற்காதவர்களும் சுயமாகத் தங்கள் அறிவை உயர்ந்த நிலையில் பேணுகின்றார்கள். அதனுடன், அனுபவ ஞானத்தையும் இணைத்து, புலமையாளர்களாகத் திகழ்கின்றார்கள்.

ஆனால், இந்த உலகம் பட்டதாரிகளை மட்டுமே, உயர்நிலையில் ஏற்றுக்கொள்கின்றது. படித்தவர்களைக் கௌரவப்படுத்தல் முக்கியமானது. ஆனால், தங்கள் கல்வியை, அனுபவத்தைக் கொண்டுள்ளவர்களைக் காணாமல் இருக்கின்றார்கள். கல்வியைப் பலவழிகளில்த் தேடலாம்.

விஞ்ஞானிகள், எழுத்துலக மேதைகள் எல்லோரும் பாடசாலைக் கல்விக் கூடாகப் படித்தவர்கள் அல்லர்; சுயசிதனையூடாகத் தங்களைப் புடம்போட்டுத் தங்கமாக உருவானவர்கள் ஆவர். கல்வி ஞானம், எல்லையில்லாப் பரமானந்தம் போன்றது.

-பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### பொலிஸ் நிலையம் வேண்டும்

பொலிஸாருக்கு வழங்கப்படும் தகவல்கள் குற்றம் இழைப்பவர்களுக்கு பரிமாறப்படுவதாக முக்கொம்பன் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி-முக்கொம்பன் கிராமத்தில் இடம்பெறுகின்ற சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துமாறு தொடர்ச்சியாக மக்கள் கோரிக்கை விடுத்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

மேலும், மக்கள் தெரிவிக்கையில், "முக்கொம்பனில் காவல் பிரிவு அமைக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ளோம். காவல் பிரிவு அமைப்பதற்கான இடத்தினை தெரிவு செய்யப்படுவதாக பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்டது. இந்த பிரதேசத்தில் தொடர்ச்சியாக மணல், மரங்கள் களவாடப்பட்டு வருகிறது.

குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் வழங்கினால் பொலிஸாரினால் குற்றம் இழைப்பவர்களுக்கு வழங்கப்படும் தகவல்கள் தெரிவிக்கப்படுகிறது" என தெரிவிக்கின்றனர்.

எனவே, விரைவாக முக்கொம்பனில் காவல் பிரிவினை அமைத்து சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துங்கள் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

- நடராசா கிருஸ்ணகுமார்



# “வெற்றிக்கு பங்களித்தவர்கள்”



பெரியசாமிப்பிள்ளை செல்வராஜ்
முன்னாள் ராஜதந்திரி/ தூதுவர்

ஒரு மனிதனின் வாழ்வில் பிறப்பு, குழந்தைப் பருவம், இளமைப் பருவம், விடலைப் பருவம், சம்சாரி, முன் முதுமை பருவம், பின் முதுமைப் பருவம், இறப்பென எட்டு பருவங்கள் காணப்படுகின்றன. இவைகளே மனித வாழ்க்கைச் சுற்று வட்டத்தில் ஏற்படும் மாற்றச் சக்கரங்கள் ஆகும்.

அந்தப் பருவங்களை எல்லாம் கடந்து, இறுதியில் வருகின்ற ஒரு பருவம் தான் முதுமைப் பருவமாகும். இவற்றுள் முன் முதுமை பருவம், பின் முதுமைப் பருவம் ஆகியனவே மனிதனின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதாகப் பல சந்தர்ப்பங்களில் எனது நண்பர்களுடன் கதைக்கும் பொழுது அவதானித்து உள்ளேன்.

பணி ஒன்றில் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றோம். அந்த தொழிலிலிருந்து ஓய்வு பெறுவது முன் முதுமைப் பருவமாகும்.

நான் கடமையாற்றிய அலுவலகத்தில் பணியில் ஈடுபட்டிருந்த சக உத்தியோகத்தர் ஒருவர், தான் ஓய்வு பெற்ற பின்னரும் தொடர்ச்சியாக அலுவலகத்துக்கு வருகை தரத் தொடங்கினார். அந்த நிறுவனத்தில் தொடர்ச்சியாக சுமார் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக வேலை செய்து வந்தமையால் அவரால் அந்த ஓய்வு நிலைமையை ஏற்றுக்கொள்ள முடியாத மனநிலை காணப்பட்டது.

அதுவே பின்னாளில் அவரது மனநிலையில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியதானது இன்றும் மனதில் அசை போடுகின்றது. பின் முதுமைப் பருவ காலகட்டத்தில் உடலியல் ரீதியாக நலிவுற்று, ஒரு தளர்ச்சியும் ஏற்படுகின்றது. இந்த காலகட்டத்தில் மன அழுத்தம் , உடலியல் ரீதியாக ஏற்படும் மாற்றங்கள், தேவையற்ற பயம், நடையில் ஒரு தளர்ச்சி, நீடித்த உடல் உபாதைகள், ஞாபக மறதி, பிறரைச் சார்ந்து வாழ்தல், பிறரின் உதவியினை எதிர்பார்க்கும் நிலைமை போன்றவற்றை எதிர் நோக்குகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் தமக்கு வயதாகி விட்டதே, தன்னால் ஏதும் செய்ய முடியாதுள்ளதே என்ற ஏக்க உணர்வானது பல முதியவர்களின் மனதை உறுத்திக் கொண்டு தான் இருக்கின்றது.

இவ்வாறான மாற்றங்களும் கூட மனித வாழ்வில் ஏற்படுகின்ற ஒரு நிகழ்வு தான் என்பதனை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் ஏற்படுகின்ற பொழுது மட்டும் தான், உளவியல் ரீதியாக ஒரு நேர்மறைத் தன்மை ஏற்படுமென்பதனையும் மறுப்பதற்கில்லை.

“பிறக்கும் போது எதனைக் கொண்டு வந்தோம். அதனை இழப்பதற்கு எதனையும் கொண்டு வரவும் இல்லை அந்திமகாலத்தில் எதனையும் எம்முடன் கொண்டு செல்லப் போவதுமில்லை”. பிறகு எதற்கு நாம் கவலைப்பட வேண்டும்?

வயோதிபப் பருவமும் வாழ்க்கைச் சுற்றில் ஏற்படும் ஒரு குழந்தைப் பருவம் தான். இருக்கின்ற காலத்தை மகிழ்வாகவும், சந்தோசமாகவும், வாழ்ந்து மகிழ்வது அவசியமாகும். இந்த உண்மையைப் புரிந்து கொண்டாலே மனதில் ஒரு குதுாகலம் உண்டாகும்.

இன்றைய முதியவர்கள் ஒரு காலத்தில் இளைஞர்களாக இருந்தவர்கள் தான். இவர்கள் தமது குடும்பத்திற்காகவும், சமூகத்திற்காகவும், தேசத்திற்காகவும், அர்ப்பணித்த பங்களிப்புக்கள் அதிகம். அனேகம்.

மூத்த குடிமக்கள் (Senior Citizens) இன்றும் தங்களுடைய சமூகத்திற்கு மிகப் பெரும் பங்களிப்பினை ஆற்றுவதோடு மட்டுமல்லாது, அவர்கள் எங்களது எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையான நல்ல படிப்பினைகளையும், கருத்துக்களையும், எடுத்துரைத்து எம்மை நல்வழிப்படுத்துகின்றனர்.

இன்று (ஆகஸ்ட் 21ஆம் திகதி) உலக மூத்த குடிமக்களின் தினமாகும்.

மூத்த குடிமக்களின் பிரச்சினைகள் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதன்மூலம் அவர்களுக்கு ஆதரவளிப்பதே இத்தினத்தின் நோக்கமாகும்.

19ஆம் திகதி ஆகஸ்ட் மாதம் 1988ஆம் ஆண்டன்று முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியான றொனால்ட் ரீகன் ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதியினை அமெரிக்காவின் தேசிய மூத்த குடிமக்கள் தினமாகப் பிரகடனப்படுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, முதன் முறையாக ஐக்கிய நாடுகள் பொதுச்சபையானது 14ஆம் திகதி டிசெம்பர் மாதம் 1990ஆம் ஆண்டன்று இத்தினத்தை உத்தியோகப்பூர்வமாக அறிவித்தது.

விஞ்ஞானம், மருத்துவம், உளவியல், அரசியல், ராஜதந்திரம், அறிவியல், மனித உரிமைகள் போன்ற பல்வேறுபட்ட துறைகளின் முன்னோடிகளாக மூத்த பிரஜைகள் தங்களது பங்களிப்பினை தேசத்திற்கும், உலகத்திற்கும் ஆற்றி இருக்கிறார்கள்.

அவர்களது அர்ப்பணிப்பு, தியாகம், விடாமுயற்சி, தன்னம்பிக்கை, தங்களது துறைகளில் காட்டிய ஆர்வம், அதன் மூலம் தமது நாட்டிற்கு வாழ்நாள் பூராவும் ஆற்றிய சேவைகளை நினைவுபடுத்தி அவர்களைப் பாராட்டுவதற்கு வழிவகுப்பதாக இத்தினம் அமைகின்றது.

அவர்களிடம் இருக்கின்ற அறிவு, விவேகம், அனுபவம், ஆகியவற்றை நாம் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்வதன் ஊடாக, அவர்கள் நாம் வாழும் இந்த உலகில் எத்தகைய பங்களிப்பினை அளித்திருக்கிறார்களென அறிந்து அதற்குரிய மரியாதையைச் செலுத்த நாம் பழகிக் கொள்ள வேண்டும்.

“நிறைகுடம் தளும்பாது. குறைகுடம் தளும்பும்”, என்பதற்கான எடுத்துக்காட்டுக்கு உரியவர்கள் அவர்கள்.

அவர்களது ஈடிணையற்ற பங்களிப்பினை நினைவு கூர்ந்து, அவர்களுக்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவது அரசாங்கங்களினதும், தனி நபர்களினதும், கடமையாகும்.

ஐக்கிய நாடுகள் சபையினது அறிக்கையின்படி, உலகம் முழுவதும் உள்ள அறுபது வயதினைக் கடந்த மனிதர்களின் எண்ணிக்கை 2025ஆம் ஆண்டில் 120 கோடியாகவும், 2050ஆம் ஆண்டளவில் இரண்டு பில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் , அதாவது உலக சனத்தொகையில் 20 சதவீததிற்கு மேற்பட்டவர்கள், மூத்தக் குடிமக்களாக இருப்பார்களென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

உலகின் ஒட்டுமொத்த மூத்த குடிமக்களில் மூன்றில் இரண்டு பங்கினர் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இவர்களுள் பெரும்பாலானோர் ஆசியக் கண்டத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பார்களெனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மூத்த குடிமக்களது நரைமுடிகள், அவர்களால் பாவிக்கப்படும் ஊன்றுகோல்கள் ஆகியன அவர்களது பலவீனங்கள் அல்ல. மாறாக, அவைகள் அவர்களது தன்னம்பிக்கை, சுய கௌரவம், அறிவு மேம்பாடு, தெளிவான ஞானம், தீர்க்கமான சிந்தனை, சுதந்திரம் ஆகியவற்றை மேம்படுத்துவதாகக் காணப்படுகின்றது.

அவர்களது வயது என்பது கணித ரீதியிலான ஓர் எண்ணிக்கை மட்டுமே. அவர்களுக்கு அவைகள் உள ரீதியான பின்னடைவினை ஏற்படுத்த மாட்டாது. மாறாக, அவைகள் அவர்களை ஊக்குவிக்கும் உன்னத செயற்பாடுகளைக் கொண்டவைகளாகும்.

ஒரு காலத்தில் கூட்டுக் குடும்பம் என்ற கட்டமைப்பு காணப்பட்டது. இன்று தனித் தனிக் குடும்பங்களாக வாழ்க்கை முறைமை மாறி விட்டதாலும், சுய நலமிக்க உலகமாகவும், சமூக வலைத்தளங்களின் செல்வாக்கு அபரிமிதமாகவும் வளர்ந்து விட்டதால், வீடுகளும் கூட இன்று அமைதி மிக்க இடமாக மாறி விட்டது.

இதனால் வீட்டில் இருக்கும் குடும்ப உறுப்பினர்கள் முதியவர்களிடம் மனம் விட்டுக் கதைக்கும் பண்பானது அருகி வருகின்றது. இதன் காரணமாக முதியவர்கள் தனித்து விடப்பட்டதொரு சூழ்நிலையை உணர்கின்றனர்.

முதியவர்களை பாரமென்று கருதும் இன்னுமொரு கூட்டம் இன்னும் இருக்கத் தான் செய்கின்றது. இதனால் தான் முதியோர் இல்லங்களானது ஆதரவற்ற அவர்களைப் பராமரிக்கும் பணியினை முன்னெடுத்துச் செல்கின்றது போலும்.

மூத்தக் குடிமக்களது அறிவு, ஆற்றல், அனுபவம் என்பன எதிர்கால சந்ததியினருக்கான வழிகாட்டிகள் ஆகும். இவைகளை இன்றைய தலைமுறையினர் சரியாகப் பயன்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

இவர்களது வயது, திறமைகளைக் கருத்திற் கொண்டு இவர்களுக்கு ஏற்ற மதிப்பினை வழங்குவதோடு அவர்களுடைய அறிவையும், விவேகத்தையும், நடைமுறை அறிவினையும் பெற்றுக்கொள்வதன் மூலமாக நாம் எவ்வாறு திறமையாகச் செயல்படலாம் என்பதையும் இளைய சமூகத்தினர் அறிந்து கொள்வது மிகவும் அவசியம்.

“வாழ்நாள் முழுவதும் உழைத்து, குடும்பங்களை வளர்த்து, எண்ணற்ற வழிகளில் இந்த தேசத்தின் வெற்றிக்குப் பங்களித்த, மூத்த குடிமக்கள் கண்ணியத்துடன் ஓய்வு பெறத் தகுதியானவர்கள்” என்ற அமெரிக்க நாட்டு அரசியல்வாதியான சார்லி கோன்சலஸ் அவர்களது கருத்து சிந்தனைக்கு உரிய ஒன்றாகும்.

உலக மக்களின் வாழ்க்கைக்குச் சிறந்த இடமாக இந்த உலகை மாற்றி அமைத்ததற்கும், அவர்களது அறிவு, ஆற்றலால், எதிர்கால சந்ததியினரை வளம் மிக்கப் பிரஜைகளாக மாற்றி அமைத்ததற்கும், எமது சிரம் தாழ்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

# உறுதி செய்ய முடியுமா?





குலசேகரம் பிரியதர்ஷன்
இரண்டாம் வருட சிறப்புகற்கை மாணவன்
கல்வி பிள்ளை நலத்துறை
இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம்

உலகத்தை நல்வழியில் மாற்றும் வல்லமை கொண்டது கல்வி. கல்வியானது ஒரு சமூகத்தை முன்னேற்றமடையச் செய்வதோடு, ஒரு மனிதன் பகுத்தறிவு கொண்டு சரியான முடிவுகளை அணுக உதவி செய்யும் ஆயுதமாகும். இக்கல்வியை முறையாகப் பெற்றுக்கொண்ட ஒருவன் சென்ற இடமெல்லாம் சிறப்புக்குரியவனே அவனது வாய்ப்புக்களும் அவனுக்கே உரித்தானதுவே.

ஆனால், இன்று அவ்வாய்ப்புக்கள் கற்றவனுக்குரியதா? என்ற கேள்வி எழும்போது அங்கு நாம் விடையளிக்கமுடியாமல் தலை குனிந்து நிற்க வேண்டியுள்ளதாகவுள்ளது. அவ்வாறான நிலைக்கு நாம் இன்று தள்ளப்பட்டுள்ளோம். என்பது மனவருத்தற்குரியது.

இருப்பினும் எமது நாடு கல்விக்குச் சிறப்புரிமை வழங்க ஒருபோதும் தவறவில்லை. ஆனால், அதனைப் பயின்று அடுத்த கட்டத்தினை நோக்கி நகர முற்படும் போது, கற்றோனுக்கு பல சவால்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது. அதில் இன்றைய காலகட்டங்களில் பிரதானமான சவாலாகக் காணப்படுவது, “கற்றோனுக்கான தொழில் வாய்ப்புகள்” இது எமது நாட்டில் காணப்படும் பிரதானமான சவாலாகக் காணப்படுகின்றது.

ஒரு மாணவன் கல்வியைப் பெற்று வளமான எதிர்காலத்தை அமைத்துக்கொள்ளவே கல்வியை அணுகுகின்றான். ஆனால், கல்வி மூலமே அவனது எதிர்காலம் வளமற்றதாக மாறப்போகின்றதா? என்ற கேள்வி மனதினை நிம்மதியற்ற நிலைக்குக் கொண்டுவருகின்றது.

ஒரு கல்வியாளன் பாலர் பாடசாலைகளில் அடிப்படைக் கல்வியைப் பெற்றுக்கொண்டு தனது அறிவினை வளர்த்து, பாடசாலைகளில் பருவத்திற்குத் தேவையான கல்வியினைப் பெற்றுக்கொண்டு சாதாரண தரம், உயர் தரம் என போட்டி நிறைந்த சூழலில் தங்களது கடின உழைப்பால் உயர் கல்வியினைப் பெறுவதற்கு பல்கலைக்கழகத்தினுள் தடம் பதிக்கின்றான். அத்தடத்தினைப் பதிக்கும் போதுதான் சமூகம் பல அறிவுரைகளை வழங்குகின்றது.

இன்றைய காலகட்டங்களில் பல்கலைக்கழகம் செல்ல விரும்பும் மாணவர்களுக்கு பொதுவாக வழங்கப்படும் அறிவுரைகளாகப் பட்டம் படித்தவர்கள் பலர் தொழில் இன்றி இருக்கின்றனர். பட்டத்தைப் பெற எடுக்கும் நேரம், உழைப்பு, பணம் எல்லாம் வீண், பட்டம் பெற்றவர்களை விடத் தகைமைகள் குறைந்தவர்கள் உயர்நிலையடைகின்றனர். என பல அறிவுரைகள் சமூகத்தில் வலம் வந்துகொண்டிருக்கின்றது.

முன்பெல்லாம் பல்கலைக்கழகம் தெரிவாகி பட்டம் பெற வாய்ப்பு கிடைத்த மாணவனுக்கு வாழ்த்துக்களும், பாராட்டுக்களும் தான் வரும். இப்போது இவ்வாறான அறிவுரைகள் தான் சமூகத்தில் உலாவி வருகின்றது.

இதில் பொதுவான அறிவுரைகளில் அனேகமானோர் எடுத்துக்காட்டுவது பட்டம் பெற்றவர்கள் தொழில் இன்றி தவிக்கின்றனர். இக்கருத்தினை பற்றி நாம் சற்று விமர்சன ரீதியில் சிந்திக்க வேண்டும்.

முதலில் நாம் ஒரு பட்டத்தினை பெறும் பட்டதாரியின் கல்விக்களம் எவ்வாறு உள்ளது? என்று பட்டதாரிகளின் நிலையிலிருந்து அணுகுவோம். ஒரு பட்டதாரி பட்டத்தினை முழுமையாகப் பெற்றுக்கொள்ள அவன் ஒரு யுத்தகளத்திற்குள்ளே களமிறக்கப்படுகின்றான் என்பது எனது மனக் கண்ணோட்டம்.

இலங்கையில் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டங்களைப் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் வழங்குகின்றது. இதனைப் பெற்றுக்கொள்ள உயர்கல்வி என்ற போட்டி நிறைந்த சூழலில் காலடி வைக்கின்றான்.

இலங்கையில் பல்கலைக்கழக நுழைவு வாய்ப்புக்கள் ஒவ்வொரு கல்வியாண்டிலும் மட்டுப்படுத்தப்பட்டே காணப்படும் பல்கலைக்கழக கல்வி மிகுந்த போட்டித் தன்மையுள்ளதாகக் காணப்படுகின்றது.

2022/2023 கல்வியாண்டில் உயர் தரத்தில் தோன்றிய 274,304 பரீட்சார்த்திகள் 166,967 பரீட்சார்த்திகள் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதியினைக் கொண்டுள்ளனர். இதேவேளை, இம்முறை பல்கலைக்கழக அனுமதிக்காக 84,174 மாணவர்கள் விண்ணப்பித்த நிலையில், 42,147 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இவ்வாறு போட்டித் தன்மை நிறைந்த சூழலில் பல்கலைக்கழகத்திற்கு உள் நுழைந்து தமது கற்றலினை மேற்கொள்கின்றனர்.

இதன்போதும் குடும்ப பொருளாதார நிலை, முறையான உறக்கம் இன்றி, ஆரோக்கியமற்ற உணவுகள், கற்கை நெறியைப் பூர்த்தி செய்வதற்கான காலம், உழைப்பு புலமைப்பரிசில்கள் மற்றும் கொடுப்பனவுகளின் வருகை எண்ணிய எதிர்பார்ப்பு, மன அழுத்தம் என பல்வேறு சவால்களை எதிர்கொண்டு ஒரு பட்டதாரி பட்டப்படிப்பினை நிறைவு செய்து சமூகத்தில் தடம் பதிக்கின்றான்.

இத்தனை சவால்கள் மற்றும் தடை தாண்டல்களை வெற்றிகொண்டு ஒரு பட்டதாரி மகிழ்ச்சியாகத் தொழில் சமூகத்திற்கு தனக்கான தொழிலைப் பெற தயாராகும் போது, அங்குதான் அவனுக்குரிய மதிப்பினையும் வாய்ப்பினையும் எமது நாடு எவ்வாறு வழங்குகின்றது. என்பதனை உணர்ந்து கொள்கின்றான்.

நாம் மீண்டும் பட்டதாரிகள் தொழில் இன்றி தவிர்க்கின்றனர் என்ற கருத்துக்கான நடைமுறை கோணத்தில் கவனம் செலுத்துவோம்.

பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பு மறுக்கப்படுகின்றதா? அவர்களின் தகமைகளுக்குரிய தொழில்களின் வெற்றிடங்கள் இல்லையா? இவர்களுக்கு வேலை வழங்க நாட்டின் பொருளாதார நிலை தாக்கம் செலுத்துகின்றதா?

மறைமுகமாக சில அரசியல் சூழ்ச்சிகள் செயற்படுகின்றதா? என்ற கேள்விகளுக்கு பொதுவாக வழங்கப்படும் பதில் நாட்டின் பொருளாதாரம் நிலை சீரற்று காணப்படுகின்றது. பட்டதாரிகளுக்குரிய தொழில் வாய்ப்புக்களை வெற்றிடங்கள் குறைவு என்பவையாகும்.

இந்தப்பதில்கள் நாம் மேலோட்டமாக பார்க்கும்போது, இதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில், நாடும் அவ்வாறான ஒரு அசாதாரண சூழ்நிலையினை நோக்கியே நகர்கின்றது. ஆனால், சற்று ஆழமான கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, மீண்டும் மனதில் சில வினாக்கள் எழுகின்றன.

பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பு மறுக்கப்படுகின்றது. காரணம் நாட்டின் நிதி வளம் போதாமை என்ற பதில் முன்வைக்கப்படுகின்றது. ஒருதலைபட்சமாக அதனை ஏற்றுக்கொள்ளலாம்.

ஆனால், எமது நாட்டின் பாதுகாப்பு பிரிவினருக்கான வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் (பொலிஸ், இராணுவம்) இன்று அதிகரித்துக் காணப்படுகின்றது. இதற்கான ஆட்சேர்ப்பு மற்றும் அவர்களுக்கான ஊதியம் வழங்க மட்டும் எமது நாட்டில் நிதி வளமும் பொருளாதார நிலையும் சீராகக் காணப்படுகின்றதா?

“மலையகத்தில் ஆசிரியர் உதவியாளர் நியமனம்” இங்கு ஆசிரியர் வெற்றிடங்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனம் வழங்கி வைத்தல் சரியான தீர்வா? மலையகத்தில் பட்டம் பெற்று வேலையின்றி இருக்கும் மாணவர்களின் நிலை என்ன? அவர்களைக் கொண்டு ஆசிரியர் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்யலாமே? என பல தரப்பட்ட வினாக்களை மனதில் எழுகின்றன. இவ்வினாக்கள் நியாயமானதாகவே உள்ளது.

இதன் மூலம் பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பு குறைவாகக் காணப்படுகின்றதா? அவர்களுக்கு ஊதியம் வழங்க நிதி வளம் போதாமை காரணமா? இல்லையெனில், மறைமுகமாகச் செயற்படும் அரசியல் சூழ்ச்சிகளா? காரணம் என்ன என்பதனை நாம் அணுகினால் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு மறுக்கப்படுகின்றது. என்பதனை உணர்ந்து இதற்கான பின்புலம் மறைமுகமாகச் செயற்படும் அரசியல் சூழ்ச்சிகளேயாகும்.

இந்நிலை தொடருமாக இருந்தால் மாணவச் சமூகம் உயர்கல்வியினை தொடராமல் தொழில் தேடி வெளிநாடுகளுக்குச் செல்ல ஆர்வம் காட்டுவர். எதிர்காலக் கல்விச் சமூகம் மற்றும் அறிவு நிறைந்த இலங்கையின் ஆளுமையும் மண்ணோடு மண்ணாகப் புதைத்துவிடும்.

மீண்டும் அறிவு வளர்ச்சியில் முன்னோக்கி நகரும் நாடுகளிடம் எமது நாடு மண்டியிட்டு நிற்கும் நிலை உருவாகும். இவ்வாறான ஒரு இக்கட்டமான நிலைக்கு எமது நாட்டையும் எதிர்கால சமூகத்தையும் நாம் தள்ளிவிடக்கூடாது. மாறாகப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்க வேண்டும். தரம் குறைந்த தகமைகளைக் கொண்டவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பினை முற்றாகத் தடை செய்ய வேண்டும்.

நாட்டில் காணப்படும் தொழில் வாய்ப்புக்கான கற்கைநெறியினை அறிமுகம் செய்தலோடு, அதனைப் பயிலும் மாணவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களை உறுதிப்படுத்த வேண்டும்.

வேலையின்றி தவிக்கும் பட்டதாரிகளுக்கு அவர்களின் தகமைகளுக்கேற்ப வேலைவாய்ப்புக்களை வழங்கவேண்டும். இவ்வாறு இல்லாவிடின், எமது நாட்டின் அறிவு முன்னேற்றம் தேங்கு நிலையிலேயே இருக்கும்.

சமூகத்தில் உயர் கல்வியைப் பெற்ற மாணவர்களுக்கு உயரிய மதிப்பினை உருவாக்க வேண்டும். உயர்கல்விக்கான நிதி ஒதுக்கீட்டினை அதிகரிக்க வேண்டும்.

“கல்வி கற்றோனுக்கான சிறந்த எதிர்காலம்” என்ற தொனிபொருளில் அரசாங்கம் கல்வியைச் சீரமைப்பதோடு பொருளாதார ரீதியிலும் முன்னேற்றம் காணவேண்டும். உயர்கல்வியுடன் தொழில்த்தகமைகளையும் ஒருங்கிணைத்துச் சிறந்த தொழில் திறமையாளர்களை உருவாக்க வேண்டும்.

நாட்டில் சிறந்த தகமைகளைக் கொண்டவர்களுக்குரிய வாய்ப்புக்களை வழங்கி அறிவு ரீதியில் முன்னேற்றமடைந்த சிறந்த ஒரு எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ள மேற்கொள்ளப்பட்ட சவால்களைச் சிறப்பான திட்டமிடல் மூலம் மாற்றியமைக்க வேண்டும்.

இவ்வாறான மாறுதல் மூலம் “கற்றோனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்புக் கல்வி கற்றோனுக்கு சென்ற இடமெல்லாம் வாய்ப்பு” என்பதனை எமது நாட்டின் கல்வி நிலையில் உறுதி செய்ய முடியும்.

# களை கட்டும் உல்லை







பாறுக் ஷிஹான்







**இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை காரணமாக பொத்துவில் அறுகம்பே பிரதேசத்தில் உல்லாசப் பிரயாணிகள் அதிகரித்து வருகின்றனர். இதனால் அறுகம்பே வளைகுடா கடற்கரை ஒரு முக்கிய சுற்றுலாத் தலமாக மேம்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**

கிழக்கு மாகாணத்தில் உள்ள திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் உள்ள சில கடற்கரைப் பகுதிகள் சர்வதேச அரங்கில் பல்வேறு தர இடத்தினைப் பெற்றிருக்கின்றன. அந்த வகையில், அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் உள்ள அறுகம்பே கடற்கரை பிரதேசம் பல்வேறு சிறப்பம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. இப்பிரதேசத்திற்குத் தினமும் உள்ளூர் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் ஆயிரக்கணக்கானோர் தமது பொழுதினைப் போக்குவதற்காக வருகை தருகின்றனர்.

கடந்த கால கொரோனா அனர்த்தம், உயிர்த்த ஞாயிறு தாக்குதல், பொருளாதார சீர்கேடு (எரிபொருள் பற்றாக்குறை எரிவாயு பற்றாக்குறை), அரகல கிளர்ச்சி உள்ளிட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இப்பிரதேச சுற்றுலாத்துறை வெகுவாக பாதிக்கப்பட்டிருந்தது. எனினும், தற்போது நாடு மீளெழுச்சி பெற்று வருவதால் இப்பிரதேசத்தின் துறை சார்ந்த மக்களின் வாழ்வாதார விருத்தி ஏற்பட்டு வருவதுடன், வர்த்தக பொருளாதார ரீதியிலான மேம்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன. இங்கு வருகை தரும் உள்ளூர் வெளிநாட்டுப் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்காகவும் கடலலை விளையாட்டில் ஈடுபடுபவர்களையும் பாதுகாப்பதற்கென அரச பாதுகாப்புப் படையினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அண்மையில் கூட உள்ளூர் பயணிகள் 5 பேர் கடலலையில் சிக்குண்ட நிலையில், அங்கு நிலை கொண்டுள்ள விசேட அதிரடிப்படையின் உயிர் காப்பு படையினரால் காப்பாற்றப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தவிர, இப்பகுதிகளில் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் வருகையினைப் போல், உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் இப்பகுதிக்கு விருப்புடன் வருகை தருகின்றனர். இதனால் தங்குமிட வசதிகள் உணவகங்கள் அதிகளவில் இப்பகுதியில் உருவாக்கப்பட்டுள்ளன.

மேலும், இக்கடற்கரைப் பிரதேசம் உலகரங்கில் மிகப் பிரபல்யம் பெறுவதற்குச் சர்வதேச அளவில் இக்கடற்பரப்பில் நீரலைச் சறுக்கு விளையாட்டுப் போட்டிகள் வருடந்தோறும் இப்பிரதேசத்தில் நடைபெற்று வருகின்றன. இங்கு சர்வதேச ரீதியிலான நீரலைச் சறுக்கு விளையாட்டு இக்கடற்பரப்பில் வருடந்தோறும் இடம்பெறுவதால், பல நூற்றுக்கணக்கான வெளிநாட்டுப் போட்டியாளர்களும் அவர்களோடு இணைந்ததாகப் பல நூற்றுக்கணக்கான பார்வையாளர்களும் இப்பிராந்தியத்திற்கு வருகை தருவது இலங்கை நாட்டுக்கு அந்நியச் செலாவணியை பெருமளவில் ஈட்டிக் கொள்வதற்கு வழிகோலியாகவும் அமைகின்றது.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் இப்பிரதேசத்தில் முகாமிட்டு சில நாட்கள் தங்கியிருந்து இப்பிரதேசத்தின் அழகினை ரசிப்பதால் இங்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தக நிலையங்கள் பல்வேறான அமையப் பெற்றுள்ளன. இதனால் பெருந்தொகை அந்நியச் செலாவணி நாட்டுக்கு வருமானம் கிட்டி வருகின்றன. இந்த மாதத்தின் முதல் வாரத்தில் மாத்திரம் சுமார் 30 ஆயிரத்துக்கு அதிகமான வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன், ஏப்ரல் மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை பொத்துவில் அறுகம்பே பிரதேசம் உல்லாசப் பயணிகளின் வருகை மற்றும் பொழுது போக்கும் பருவ கால இடமாகக் கூறப்படுகிறது. இதை விட வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பேராதனைப் பூங்கா, நுவரெலியா, பாசிக்குடா, உல்லை, போன்ற இடங்களுக்குப் பெருமளவில் சென்று பொழுதைக் கொண்டாடி உல்லாசமாகக் கழித்து வருகிறார்கள் .

இந்த வருடத்தில் இதுவரை பன்னிரண்டு இலட்சத்து 50 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது. இதற்கமைய, பொத்துவில், அறுகம்பே பிரதேசத்திற்கு பெருந்தொகையான உல்லாசப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.குறிப்பாக அறுகம்பை, உல்லை பகுதியில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுடன் உள்ளூர் சுற்றுலாப் பயணிகளும் சரளமாக இணைந்து குதூகலமாகப் பொழுதைக் கழிப்பதற்காக இப்பிரதேசத்திற்குப் படை எடுத்து வருகின்றனர்.

இதை விடக் கணிசமான வருமானத்தை ஈட்டும் சாத்தியக்கூறுகளும் உள்ளூர் மற்றும் சர்வதேச சுற்றுலாப் பயணிகளுக்கு மிகவும் விரும்பத்தக்க இடமாக அறுகம்பே சுற்றுலா வலயத்தை மேம்படுத்துவதற்கான விரிவான திட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

குறித்த அறுகம்பே வளைகுடா கடற்கரையோரத்தில் பிரபலமாக விளங்கும் நீர் பனிச்சறுக்கு போன்ற நீர் விளையாட்டுகளை ஊக்குவிப்பதன் மூலம் கணிசமான வருமானத்தை அடைவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் என அவர் குறிப்பிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்ட சுற்றுலாத் துறையின் முக்கிய பங்குதாரர்களுடன் கடந்த காலத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

2035ஆம் ஆண்டளவில் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுற்றுலாத்துறை 10% பங்களிப்பை வழங்கும் என உலகளாவிய அறிக்கைகள் முன்னறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான மாற்றத்திற்கு இலங்கை முன்கூட்டியே தயாராகி வருவதை அறுகம்பே வளைகுடா கடற்கரை வெளிநாட்டு உள்ளூர் பயணிகளின் வருகை உறுதிப்படுத்துகின்றன.





# வாழ்வின் வளத்தை பக்குவப்படுத்தும்

லோகநாதன் பிறவிந்,
முதலாம் அரையாண்டு,
கல்வி–பிள்ளை நலத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

**ஒவ்வொரு மனிதனும் பிறந்தது முதல் வளர்ந்து முதுமைப் பருவம் அடையும் வரை ஒவ்வொரு வயது மட்டத்திற்கு ஏற்ப பல்வேறு பருவங்களைக் கடந்தே வளர்கின்றான். ஓர் மலர் மாலை அழகான வடிவம் பெறுவதற்கு எவ்வாறு ஒவ்வொரு பூவின் அடுக்குகளும் செல்வாக்குப் பெறுகின்றதோ, அதுபோன்று ஒவ்வொரு வளர்ச்சிகட்டமும் மனிதனின் அழகிய, முழுமையான, நிறைவான வாழ்க்கைக்கு அவசியமானதாக காணப்படுகின்றது. இதில் மிக முக்கியமானதொரு வளர்ச்சி கட்டமாக பிள்ளை பருவம் காணப்படுகின்றது. தத்துவவியலாளர்களின் ஆய்வுப் பகுப்பியலின் அடிப்படையில், இப்பிள்ளை பருவமானது ஆரம்பப் பிள்ளைப் பருவம்(2–6), பின் பிள்ளை பருவம் (6–12) என்ற வகைப்பாட்டில் அமையப் பெறுகிறது.**

இப்பிள்ளை பருவமானது ஒவ்வொரு பிள்ளைகளுடைய உடல் வளர்ச்சி, இயக்க விருத்தி, அறிவு விருத்தி, மொழி விருத்தி என்பவற்றுடன் பிள்ளை மற்றும் சமூகத்திற்கு இடையிலான தொடர்புகளைப் பேணுவதில் மிக முக்கிய பருவமாகக் காணப்படுகின்றது. பிள்ளைகள் இப்பருவத்தில் பெற்றுக் கொள்ளும் அனுபவ ஆற்றல்கள் பிற்கால சிறப்பான பல்வேறுபட்ட வளர்ச்சிக்குத் துணை புரிகிறது. அதனடிப்படையில் நோக்கும் போது, பிள்ளைகளால் இப்பருவத்தில் பங்குகொள்ளும் பல்வேறு விளையாட்டுகள் அவர்களைச் சிறப்பான முறையில் சமூகமயமாக்களுக்கு இட்டுச் செல்வதற்கான அதிக வாய்ப்புகளை ஏற்படுத்துகிறது. இதில் பிள்ளைகள் பங்குகொள்ளும் கிராமிய விளையாட்டுக்கள் முக்கியம் பெறுகின்றன.

அதாவது ஒவ்வொரு பிள்ளையும் தனது தாய், தந்தை, பின் தமது சொந்த உறவுகளின் மூலமும் ஆரம்ப மட்ட சமூகமயமாக்களுக்கு உட்படுகின்றனர். இது அன்பு, பரிவு, அரவணைப்பு என்ற அடிப்படையில், ஒரு எல்லை படுத்தப்பட்ட நிலையிலேயே காணப்படும். அதற்கு அடுத்த கட்டமாகப் பிள்ளைகள் தமது ஒத்த வயதினருடன் இணைந்து செயற்படுவதன் மூலம் அடுத்தகட்ட வெளியுலக சமூகமயமாக்களை அடைய முடியும்.

அந்தவகையில் பிள்ளை பருவ மட்டத்தினரை சமூகமயமாக்களுக்கு உட்படுத்தும் தலையாய பணியை அவர்களால் விளையாடப்படும் விளையாட்டுக்கள் நிகழ்த்தி வருகின்றனர். அதாவது பிள்ளைகள் விளையாட்டு எனும் போது அதீத விருப்பத்துடன் ஆர்வமாகக் காணப்படுவர்.

இத்தன்மையானது ஏனைய சில ஒத்த வயதினர் இணைந்து விளையாடுவதைப் பார்க்கும் போது, அவர்களுடைய அவாவானது ஆர்வமாகத் தூண்டப்பட்டு, பிறருடன் இணைந்து செயலாற்றுவதற்கான வாய்ப்பை வழங்குகிறது.

மேலும், பிள்ளை பருவத்தினர் ஒருவரைப் பின்பற்றிப் போலச் செய்யும் தன்மை அதிகம் வாய்க்கப் பெற்றவர்களாகக் காணப்படுவர். இத்தகைய தன்மை அடிப்படையில், பிள்ளைகள் இணைந்து கடை வைத்து விளையாடுவது, கூட்டாஞ்சோறு போன்ற விளையாட்டுகளின் போது, அம்மா, அப்பா, கடைகாரன், ஆசிரியர், பொலிஸ் போன்ற தமது மனம் கவர் பாத்திரங்களை ஏற்று மனதிற்கொண்டு அவர்கள் போல, பாவனை செய்து விளையாடுவார். இத்தன்மையானது எதிர்காலத்தில் சமூகத்தில் தாம் ஏற்க வேண்டிய பாத்திர அனுபவங்களாக இவை அமையும் இடத்தில் அவை சிறப்பான சமூகமயமாக்களுக்கு பிள்ளைகளைத் தயார்ப் படுத்தும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

தொடர்ந்து கிளித்தட்டு, கிட்டிப்புள், கோலி அடித்தல் போன்ற சில கிராமிய விளையாட்டுகளைப் பிள்ளைகள் கூட்டாக இணைந்து விளையாடும் போது, பிள்ளைகளிடையே குழுச் செயற்பாடு, குழுப் பற்று, இலக்கை சரியாக அடைதல், அடித்தல், வெற்றி தோல்விகளைச் சமமாக மதித்தல், சக உறுப்பினரைப் பாராட்டல், நேரான கவனம் போன்ற இன்னோரன்ன பண்புகளை அவ்விளையாட்டுக்கள் பிள்ளைக்கு வழங்கி எதிர்கால சமூகத்தில் நாம் பழக்கப்பட வேண்டிய பண்புகளை வழங்கும் அடிப்படை அஸ்திவாரமாக அமைகின்றன.

அத்துடன் இக்கிராமிய விளையாட்டுகள் பிள்ளைகளைச் சமயோசிதமாகச் சிந்தித்தல், செயல்படல், தீர்மானங்களை மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகளைச் செய்வித்து அதன் மூலம் அவர்களை சமூகமயமாக்களுக்கு உட்படுத்துகின்றது. உதாரணமாக நாயும் இறைச்சியும், பல்லாங்குழி போன்ற விளையாட்டுகளில் ஓர் இலக்கை நோக்கிச் செயல்படும் போது எது சிறப்பான ஒரு முடிவாக இருக்கும், அதனைச் செய்வதால் என்ன என்ன விளைவுகள் ஏற்படும், அதை எவ்வாறு சரி செய்யலாம் போன்ற திறன் விருத்திக்கு வழி செய்கின்றன.

இவை எதிர்காலத்தில் பிள்ளைகள் சிறப்பாக சமூகத்தில் ஊடுருவச் சிறந்த வழிகளாக அமைகின்றன.

இவ்வாறு பல்வேறு கிராமிய விளையாட்டுக்கள் பிள்ளைகளை அவர்களுடைய பருவத்தில் சமூகமயமாக்களுக்கு தயார்ப்படுத்துகின்ற போதிலும், இன்றைய நவீனத்துவம் காரணமாக இவை தடைப்படும் வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன. உதாரணமாகப் பிள்ளைகள் ஏனையவருடன் சேர்ந்தால் கெட்ட பழக்க வழக்கங்களைப் பழகுவார் என்ற பெற்றோர் மனப்பாங்கு, இவ்விளையாட்டுகளில் எந்தவித பலனும் இல்லை என்ற சிந்தனை, சிறுவயதிலேயே கற்றலை திணிக்கும் கல்வி மோகம், நகர வாழ்க்கை பிணைப்பு என்பன மனிதர்களிடையே குடி புகுந்து பிள்ளைகளைக் கிராமிய விளையாட்டுகளில் ஈடுபடாமல் தடையாக அமைந்து அவர்களது சமூகமயமாக்கலுக்கான தொடர் வாய்ப்புகளைத் தடை செய்கின்றன. இது பிள்ளைகளுடைய எதிர்கால வளர்ச்சியைப் பாதிக்க கூடியனவாக கூட அமையும்.

எனவே, பிள்ளைகளுக்கான சிறந்த சமூகமயமாக்கல் வாய்ப்புகளை ஏற்படுத்துவது நம் ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

"பாரம்பரியம் என்பது வாழ்வை பாழாக்குவது அல்ல, வாழ்வில் வளத்தை பக்குவப்படுத்துவது"







# ரந்தோலி பெரஹரா...

வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி தலதா மாளிகையின் வருடாந்த எசல பெரஹராவின் இறுதி ரந்தோலி பெரஹரா திங்கட்கிழமை(19) இரவு நடைபெற்றதுடன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, தனது பாரியார் மைத்திரி விக்ரமசிங்க ஆகியோர் பல்லாயிரக்கணக்கான மக்களுடன் இணைந்து பெரஹராவைக் கண்டு களித்தனர்.







# எண்ணெய்க்காப்பு

காரைதீவு அருள்மிகு ஸ்ரீ ஆதிசிவன் ஆலய நவகுண்டபட்ஷ மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி பெருவிழாவின் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை(20) சிறப்பாக நடைபெற்றது. வியாழக்கிழமை (22) மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

- வி.ரி.சகாதேவராஜா









தார்

# தந்தைக்கு எதிராக சின்ன மகன் புகார்





தந்தையை கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என பொலிஸ் நிலையத்தில் 5 வயது சிறுவன் புகாரளிக்க வந்த சம்பவம் மத்திய பிரதேசத்தில் நடந்தேறியுள்ளது.

மத்திய பிரதேச மாநிலம் தார் மாவட்டத்தில் உள்ள பாக்கனேர் பொலிஸ் நிலையத்துக்கு வந்த 5 வயது சிறுவன், தன் அப்பாவுக்கு எதிராக புகாரளிக்க வந்ததாக கூறியுள்ளான். இதனைக் கேட்ட பொலிஸார் ஆச்சரியத்துடன், என்ன மாதிரியான புகார் என விசாரித்தனர்.

அதில், வீதி அருகே செல்லக்கூடாது, ஆற்றுக்கு அருகே செல்லக்கூடாது என தினமும் தன் தந்தை திட்டுவதாகவும், அதற்காக அடிப்பதாகவும், அவரை கைது செய்து சிறையில் அடையுங்கள் என்றும் கோபமாக கூறுகிறான்.

அச்சிறுவனின் பேச்சை முழுமையாக கேட்ட பொலிஸார், தந்தை அக்பால் மீது நடவடிக்கை எடுக்கிறோம் என உறுதியளித்து சிறுவனை அனுப்பி வைக்கின்றனர். அவன் புகார் அளிக்க வந்தபோது, அவரது தந்தை ஊரில் இல்லை என்றும் இதுப்பற்றி அவரிடம் விசாரித்ததில் வீதி, ஆறு போன்ற பகுதிகளுக்கு செல்லக்கூடாது என தனது குழந்தைக்கு வலியுறுத்தியதாக கூறியுள்ளார்.

இது தொடர்பான வீடியோ தற்போது இணையத்தில் பரவி வருகிறது.

ஆந்திரா

## சமோசா சாப்பிட்ட குழந்தைகள் உயிரிழப்பு



ஆந்திராவில் காப்பகம் ஒன்றில் சமோசா சாப்பிட்ட 3 குழந்தைகள் உடல் நலக்குறைவால் உயிரிழந்தனர்.

கொட்டாரட்லா என்ற ஊரில் 60 மாணவர்கள் தங்கியுள்ள ஆதரவற்றோர் சிறுவர்கள் காப்பகத்தில் அதன் நிர்வாகம் சார்பில் ஞாயிறன்று சமோசாக்கள் வழங்கப்பட்டன. இதையடுத்து, 27 பேருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். இதில் 3 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். 4 பேரின் உடல் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

சென்னை

## ஆம்ஸ்ட்ரோங் கொலை வழக்கு: நெல்சனின் மனைவியிடம் விசாரணை



ஆம்ஸ்ட்ரோங் கொலை வழக்கு தொடர்பாக பிரபல திரைப்பட இயக்குநர் நெல்சனின் மனைவியிடம் தனிப்படை பொலிஸார் விசாரணை நடத்தினர்.

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ரோங், சென்னை பெரம்பூரில் ஜூலை 5ஆம் திகதி வெட்டி கொலை செய்யப்பட்டார். இந்த சம்பவத்தில் பொலிஸ் நிலையத்தில் ஆஜரான கூலிப்படையினர், ஆற்காடு சுரேஷ் கொலைக்கு பழி வாங்கவே இவரை கொலை செய்ததாக தெரிவித்தனர். ஆனால், பொலிஸார் தொடர் விசாரணையில் இந்த வழக்கில் மேலும் பல முக்கிய திருப்பங்கள் ஏற்பட்டன.

இந்த கொலை வழக்கில் 23 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ள நிலையில், பிரபல திரைப்பட இயக்குநர் நெல்சனின் மனைவியிடம் தனிப்படை பொலிஸார் விசாரணை நடத்தினர்.

அடுத்த கட்டமாக நெல்சனிடம் விசாரணை நடத்தவும் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

போலந்து

## மோடி தேநீர் கடை



குஜராத்தின் ராஜ்கோட்டை பூர்விகமாகக் கொண்ட சேத்தன் நந்தானி என்பவர் பிரதமர் நரேந்திர மோடியின் நினைவாக போலந்து நாட்டில் தேநீர் கடை ஒன்றை நடத்தி வருவதாக தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அரசு முறை பயணமாக போலந்துக்கு செல்கிறார். அங்கு அவர், அந்நாட்டு தலைவர்களை சந்திக்கவுள்ள நிலையில், போலந்தில் வசிக்கும் இந்திய வம்சாவளியினர் பிரதமரின் வருகைக்கு மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். இதுதொடர்பான காணொலிகள் இணையத்தில் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில், குஜராத்தின் ராஜ்கோட்டை பூர்விகமாகக் கொண்ட சேத்தன் நந்தானி என்பவர் பிரதமர் நரேந்திர மோடியின் நினைவாக போலந்து நாட்டில் தேநீர் கடை ஒன்றை நடத்தி வருவதாக தெரிவித்துள்ளார். போலந்து தலைநகர் வார்ஸா நகரில் “சாய்வாலா தி காஸிப் சென்டர்’ என்ற பெயரில் தேநீர் கடை நடத்தி வருகிறார். இதுகுறித்து அவர் கூறுகையில், “நான் கடந்த 14 வருடங்களாக போலந்து நாட்டில் வசித்து வருகிறேன். இந்த உணவகத்துக்கு ‘சாய்வாலா’ என பெயரிட முக்கிய காரணம் பிரதமர் மோடி தான். போலந்தில் இதுபோன்ற ஒரு உணவகத்தை நாங்கள் தான் முதன்முதலில் ஆரம்பித்தோம் என்றார்.




சிகாகோ

## பைடனுக்கு நன்றி சொன்ன கமலா

ஜோ பைடனின் வாழ்நாள் சேவைக்காக நன்றி தெரிவித்துக் கொள்வதாக கமலா ஹாரிஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நவம்பர் 5ஆம் திகதி நடைபெறும் நிலையில், குடியரசுக் கட்சியின் அதிகாரப்பூர்வ வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ஜனநாயக கட்சியின் வேட்பாளராக துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் களம் காண்கின்றனர்.

இந்நிலையில், சிகாகோவில் நடைபெற்ற ஜனநாயக கட்சியின் தேசிய மாநாட்டில் ஜனாதிபதி ஜோ பைடனுக்கு கமலா ஹாரிஸ் நன்றி தெரிவித்துள்ளார்.

அவர் பேசுகையில், “வரலாற்று சிறப்புமிக்க தலைமையை அளித்த ஜனாதிபதி ஜோ பைடனுக்கு நன்றி. வாழ்நாள் முழுவதும் தேசத்துக்காக சேவை செய்துள்ளீர்கள். நாட்டுக்கு சேவை செய்துள்ள உங்களுக்கு நாங்கள் என்றென்றும் நன்றி உள்ளவராக இருப்போம்” என்று கூறினார்.




# பொலிஸ் அணி வெற்றி

விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டு விழா 2024 ஒகஸ்ட் 16 முதல் 18 வரை கொழும்பு குதிரைபந்தய திடலில் நடைபெற்றது.

இங்கு ரக்பி, உதைபந்தாட்டம், கூடைப்பந்து, ஹொக்கி மற்றும் கிரிக்கெட் ஆகிய போட்டிகள் நடைபெற்றன. ஏழு பேர் கொண்ட ரக்பி போட்டியில் பொலிஸ் ரக்பி A அணி ‘கிண்ண’ சம்பியன்ஷிப்பையும், பொலிஸ் ரக்பி B அணி ‘கிண்ண’ சம்பியன் பட்டத்தையும் வென்றன.

இதில் இலங்கை பொலிஸ் ரக்பி அணியுடன் CRNFC, Havelock, CHNFC, விமானப்படை கடற்படை மற்றும் இராணுவ ரக்பி அணிகள் பங்குபற்றின CRNFC அணி, பொலிஸ் றக்பி அணியுடன் இறுதிப் போட்டியில் போட்டியிட்டது. பொலிஸ் றக்பி அணி 17 கோல்கள் அடித்து வெற்றிபெற்றது. CRNFC அணி 10 கோல்களை பெற்றது.

இலங்கை பொலிஸ் ரக்பி வரலாற்றில் 35 வருடங்களின் பின்னர் பெறப்பட்ட ஏழு பேர் கொண்ட ரக்பி போட்டி சம்பியன்ஷிப் வெற்றியாகும்.




## பாகிஸ்தான் எதிர் பங்களாதேஷ்: இன்று ஆரம்பிக்கிறது டெஸ்ட் தொடர்

பாகிஸ்தான், பங்களாதேஷுக்கு இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரானது ராவல்பின்டியில் இன்று புதன்கிழமை (21) காலை 11 மணிக்கு ஆரம்பிக்கவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கிறது.

ஜேஸன் கில்லெஸ்பியின் பயிற்றுவிப்பின் கீழான முதலாவது தொடரில் பாகிஸ்தான் அணி நான்கு வேகப்பந்துவீச்சாளர்களை அணியில் பெயரிட்ட நிலையில், ஆடுகளமானது வழமை போன்று துடுப்பாட்ட வீரர்களுக்கு சாதகமாக இல்லாமல் வேகப்பந்துவீச்சாளர்களுக்கும் ஒத்துழைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பங்களாதேஷானது பாகிஸ்தானுக்கு சவாலையளிப்பதற்கு அணித்தலைவர் நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ, ஷகிப் அல் ஹஸன், முஷ்பிக்கூர் ரஹீம், லிட்டன் தாஸ், மொமினுல் ஹக் ஆகியோரிடமிருந்து சிறப்பான பெறுபேறுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

## இன்று ஆரம்பிக்கிறது டெஸ்ட் தொடர்: இங்கிலாந்தை வீழ்த்துமா இலங்கை?

இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரானது மன்செஸ்டரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கிறது.

இங்கிலாந்தில் வைத்து இங்கிலாந்தை வெல்வது கடினமானதாகக் காணப்படுகின்ற நிலையில், அசித பெர்ணாண்டோ, பிரபாத் ஜெயசூரிய, விஷ்வ பெர்ணாண்டோ, கசுன் ராஜித உள்ளிட்டோரைக் கொண்ட இலங்கையின் பந்துவீச்சுக் குழாமானது வேகமாக ஓட்டங்களைக் பெறும் இங்கிலாந்தின் விக்கெட்டுகளைக் கைப்பற்றுவதிலேயே இலங்கையின் வெற்றிவாய்ப்பு தங்கியுள்ளது.



தவிர சிரேஷ்ட வீரர்களான திமுத் கருணாரத்ன, அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால் உள்ளிட்டோரிடமிருந்தும் நீண்ட இனிங்ஸ்கள் தேவைப்படுகின்றன.

## பெண்களுக்கான எறிபந்து: சம்பியனானது கணேசா

அஸ்ஹர் இப்றாஹீம்



கிழக்கு மாகாண மட்ட 20 வயதுகுட்பட்ட பெண்களுக்கான எறிபந்து போட்டியில் கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட சேனைக்குடியிருப்பு கணேசா மகா வித்தியாலயம் சம்பியனாகி, தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 21, ஆகஸ்ட் 2024, இல.08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.